ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



(ஸ்ரீ ராமாநுஜர்)

அங்கயல் பாய்வயல் தென்னரங்கன், அணியாகமன்னும்
பங்கய மாமலர்ப் பாவையைப் போற்றுதும், பத்தியெல்லாம்
தங்கியதென்னத் தழைத்து நெஞ்சேநந் தலைமிசையே
பொங்கிய கீர்த்தி, இராமாநுசனடிப் பூமன்னவே.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ :



முன்னுரை

'பாணன் பெருமை' என்னும் இந்நூல் வடிவில் சிறியது. பொருளைப்பற்ற மிகப்பெரியது. ஞாலமேழுமுண்டு ஆலிலையில் துயில்கொண்ட பரமனின் நீலமேனியழகைத் திருவடிமுதல் திருக்கண்கள் அளவாக முற்றவுங்கண்டு பரப்பின்றிப் பத்துப்பாட்டாலே வெளியிட்டவர், திருப்பாணாழ்வார். அமுதிலுமாற்றவினியனை அணியார்பொழில்சூழ் அரங்கநகரப்பனை எம்பெருமான், லோகஸாரங்க முனிவரை 'நம் பாணனை அழைத்து வாரும்' என அருள் பாடிட்டு லோகஸாரங்கர் தோளில் எழுந்தருளி திருமணத் தூண் அருகே நின்று எம்பெருமான் தன் அழகைக் காட்டக் கண்டு ஆனந்தம் மேலிட்டு மற்றொன்றினைக் காணாது அவன் மேனியில் இரண்டறக் கலந்து வாழ்ந்துய்ந்த பெருமை பாணனுக்கே தனிச் சிறப்பாயது. இப் பெற்றியரான திருப்பாணாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய 'அமலனாதி பிரான்' என்று துவங்கும் பத்துப்பாட்டுக்களுக்கு முன்னங் குரவோர் மூவர் உரைசெய்துள்ளனர். ஸ்ரீவேதாந்ததேசிகன் அருளிச்செய்த 'முனிவாஹனபோகம்' என்ற அமலனாதிபிரான் வியாக்கியானமான ரஹஸ்யநூலின் பொருளை திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் 14—10—65-இல் உபந்நியாஸம் செய்ததின் ஸாரமாக 'பாணன் பெருமை' என்னும் இந்நூல் எழுதி அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.

ஸ்ரீ ராமாநுஜ மிஷன் திருநெல்வேலி மாவட்டக் கிளையின் சார்பில் திருநெல்வேலி பாளையங்கோட்டை ஸ்ரீ கோபாலஸ்வாமி கோவிலில் பராபவ ௵ மார்கழி ௴ 30 நாளும் ஸ்ரீ ராமாநுஜ மிஷன் திருநெல்வேலி மாவட்டக்கிளை கௌரவ பொதுக்காரியதரிசி திருநாங்கூர் பிரதிவாதி பயங்கரம் நியாய, வியாகரண சிரோமணி, தமிழ் வித்வான், ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமியால்,

(தமிழ் பண்டிட் மருத்துவச் சரித்திர ஆராய்ச்சி இலாகா அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி பாளையங்கோட்டை) நடத்தப்பட்டு வந்த திருப்பாவை உபந்யாஸ சாற்றுமுறை ஞாபகார்த்தமாக அச்சிடப்பட்டு வெளியிடப்பெறுகிறது. பாளையங்கோட்டை ஸ்ரீ கோபால ஸ்வாமிகோவில் தர்மகர்த்தா ஸ்ரீ T. M. சுப்ரமணிய அய்யர் அவர்களின் அன்புமிக்க ஆதரவினாலும் மற்றும் பாளையங்கோட்டை வாசிகளான ஆஸ்திக அன்பர்கள் அனைவரின் ஆதரவினாலும் இந்த உபந்யாஸம் இனிது செவ்வனே ஆண்டாள் திருக்கல்யாணவைபவத்துடன் நடந்தேறியது. ஸ்ரீ கோபாலன் இன்னருளால் அனைவரும் நீங்காத செல்வம் நிறைந்து செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புற்று வாழ்வாராக என வாழ்த்துவோமாக.

P. B. K. ஸ்ரீநிவாஸாசாரியார்.

திருப்பாணாழ்வார் சரித்திரம்

ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரன், நம்மிடம் பரமகருணைகொண்டு தனது மெய்யடியார்களை இவ்வுலகில் தோன்றச்செய்து தெய்வத்தமிழ் மணங்கமழத் திவ்யப்பிரபந்தங்களை வெளியிட்டருளினான். நான்மறை நூல்கள், எம்பெருமானது பரத்வமான மேலானநிலையையறிவிக்கின்றன. வேதத்தோடொத்து எம்பெருமானால் பிரமனுக்கு உபதேசிக்கப்பட்ட பாஞ்சராத்திர நூல்கள் அவனது திருப்பாற்கடல்நாதனும் மேன்மையை விளக்குவன. ராமாயணபாகவதமுதலான இதிஹாஸ புராணங்கள் அவனது ராமகிருஷ்ணாதிவிபவாவதாரத்தன்மைகளை விவரிப்பன. அவரவர் உள்ளத்தேயுறையும் மாலான அந்தர்யாமியின் பண்புகளைத்தெரிவிப்பன ஸ்ம்ருதிதர்மசாஸ்த்திரஸித்தாந்தங்கள். எம்பெருமானது பின்னானார் வணங்குஞ்சோதியாய ஆர்ச்சாவதார நிலையினைச் சிறப்பாக எடுத்துக்கூறுவன திவ்யப்பிரபந்தங்கள். அவற்றில் அமலனாதிபிரான் பாடியதிருப்பாணாழ்வார், கலி 343 வதான துர்மதி வருஷ கார்த்திகை மீ கிருஷ்ணபக்ஷம் த்விதீயை புதன்கிழமை கூடின ரோஹிணி நக்ஷத்திரத்தில் எம்பெருமானது ஸ்ரீவத்ஸாம்சமாய் சோழமன்னர் தலைநகரமான கோழியென்னப்படும் நிசுளாபுரியென்ற உறையூரின் ஓங்கு பெருஞ்செந்நெற்பயிர் நடுவேதோன்றினார். பகவத்பக்தி மிக்கபாணர்

குடிப்பிறப்பாளனொருவன் நெற்கதிரறுக்கவேண்டி அங்குவரச்சிறு குழந்தைவடிவினரான இவரை எடுத்து அன்புடன் தம் மனைவிபால் கொடுத்துப் பாலூட்டிச் சீராட்டிப்பாராட்டி வளர்த்து வந்தான். வயது வளர வளர எம்பெருமானிடம் பேரமர்காதலுங்கூட வளரப் பெற்ற விவர், தானவளரும் பாணர்குடிக்குச் சேர சிறுபாண் பெரும்பாண் முதலிய இசைக்கருவியுடன் பண்ணமைத்து இசை பாடுவதில் வல்லுநராய், காவேரிக் கரையிலிருந்து எம்பெருமானை நினைந்து உள்ளமுருக மெய் மறந்து கண்ணீர் மல்க இனிதாகக் கானம் புரிந்துவந்தார். ஒருநாள் எம்பெருமானது நியமனத்தின பேரில் அரங்கனின் அணுக்கத்தொண்டரான லோகஸாரங்க முனிவர், இவரை வெகுவாக வேண்டி வசப்படுத்தித் தமது தோளில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து பிரணவாகாரவிமானத்தின் கீழ் அரவணைப் பள்ளிகொள் பெரியபெருமாள் திருமுன்பு நிறுத்த எம்பெருமானை முற்றூட்டாக வனுபவித்து அப்படியே 'அமலனாதிபிரான்' பாடியருளி எம்பெருமானது திருமேனியில் இரண்டறக்கலந்து அந்தமில் பேரின்பத்தடியரானார். இவர் இவ்வுலகில் வாழ்ந்திருந்தது ஐம்பது வருஷகாலமென்பர். பரிசு பெற்ற பாணன், பரிசு விழைவான் பாணனை ஆற்றுப்படுத்துவது போல, நம்மையிவர் தம்மனுபவத்தைக் கூறுவதன் மூலமாய் நல்லாற்றுப்படுத்தினார்.

திருப்பாணாழ்வார் திருநக்ஷத்திரத்தனியன்

வ்ருச்சிகே ரோஹிணீ ஜாதம் ஸ்ரீபாணம் நிசுளாபுரே
ஸ்ரீவத்ஸாம்சம் காயகேந்த்ரம் முநிவாஹநமாச்ரயே

திருப்பாணாழ்வார் வாழித்திருநாமம்

உம்பர் தொழுமெய்ஞானத்துறை யூரான வாழியே
உரோஹிணிநாள் கார்த்திகையில் உதித்தவள்ளல் வாழியே
வம்பவிழ்தார் முனிதோளில் வந்தபிரான் வாழியே
மலர்க்கண்ணை வேறொன்றில் வையாதான் வாழியே
அம்புவியில் மதிளரங்கர் அகம்புகுந்தான் வாழியே
அமலனாதி பிரான்பத்துமருளினான் வாழியே
செம்பொனடி முடியளவும் சேவிப்போன் வாழியே
திருப்பாணன் பொற்பதங்கள் ஜகதலத்தில் வாழியே.

சீரிய நான்மறைச் செம்பொருள், செந்தமிழாலளித்த
பாரியலும் புகழ்ப் பாண்பெருமாள், சரணம்பதுமத்
தாரியல் சென்னியிராமாநுசன் தன்னைச் சார்ந்தவர்தம்
காரிய வண்மை, என்னால் சொல்லொணாதிக் கடலிடத்தே.

(இராமாநுச நூற்றந்தாதி)

உலகறிய மலிபுகழ்க் கார்த்திகை மாதத்தில்
உரோகிணி நாளுறந்தை வளம்பதியில் தோன்றித்
தலமளந்த தென்னரங்கர்பால் உலோக
சாரங்கமாமுனிதோள் தனிலே வந்து
பலமறையின் பொருளாற் பாண்பெருமாளே நீ
பாதாதிகேசமதாய்ப் பாடித் தந்த
சொல வமலனாதிபிரான் பத்துப்பாட்டும்
சோராம லெனக் கருள்செய் துலங்க நீயே

(பிரபந்தஸாரம்)

வண்டினமுரலுஞ் சோலை மதியினமணிமார்பன் றன்னைக்
கண்டுளநிறையா நந்த நீரிருகண்ணுங் காட்ட
அண்டர் நாயகனை வாழ்த்தியவனருளமுதமாந்திப்
பண்டுபோம் பொருள் கிடைத்தபடியுளமகிழ்ந்தானன்றே.
மாடமாளிகையரங்க மறைவலாரிவனை வாழ்த்திக்
கோடுடைப் பரனுக் குற்ற குணங்களிலீடுபட்டுப்
பாடலிலுனக்கு நாமம் பாண்பெருமாள் என்றோத
வீடிலான் வேதாந்தார்த்த மிசைத்தனன் றமிழிலன்றே

(ஸ்ரீ சடகோப திவ்ய சரிதம்)

காண்பனவு முரைப்பனவு மற்றொன்றிக்
கண்ணனையே கண்டுரைத்த கடியகாதற்
பாண்பெருமாள் அருள்செய்த பாடல் பத்தும்
பழமறையின் பொருளென்று பரவுமின்கள்

(முனிவாகனபோகம்)

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்.

தனியன்கள்

பெரிய நம்பிகள் அருளிச்செய்தது.

ஆபாத சூடமநுபூய ஹரிம் சயானம்
மத்யே கவேரதுஹிதுர் முதிதாந்தராத்மா.
அத்ரஷ்ட் ருதாம் நயநயோர் விஷயாந்தராணாம்
யோ நிச்சிகாய மநவை முநிவாஹனம் தம்.

திருமலை நம்பிகள் அருளிச்செய்தது.

காட்டவே கண்டபாதகமல, நல்லாடை, யுந்தி
தேட்டருமுதரபந்தம், திருமார்பு, கண்டம், செவ்வாய்
வாட்டமில்கண்கள், மேனி, முனியேறித் தனிபுகுந்து
பாட்டினால் கண்டுவாழும் பாணர்தாள் பரவினோமே

திருப்பாணாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

அமலனாதிபிரான்

அமலனாதிபிரான் அடியார்க்கென்னையாட்படுத்த
விமலன், விண்ணவர்கோன் விரையார்பொழில் வேங்கடவன்,
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதிளரங்கத்தம்மான், திருக்
கமலபாதம் வந்துஎன் கண்ணினுள்ளன ஒக்கின்றதே. — (1)

உவந்த உள்ளத்தனாய் உலகமளந் தண்டமுற
நிவந்த நீண் முடியன் அன்றுநேர்ந்த நிசாசரரை
கவர்ந்த வெங்கணைக்காகுத்தன் கடியார்பொழிலரங்கத்தம்மான், அரைச்
சிவந்த ஆடையின்மேல் சென்றதாமென சிந்தனையே. — (2)

மந்திபாய் வடவேங்கடமாமலை, வானவர்கள்
சந்தி செய்யநின்றான் அரங்கத்தரவினணையான்
அந்திபோல் நிறத்தாடையும் அதன்மேல் அயனைப்படைத்ததோர் எழில்
உந்திமேலதன்றோ அடியேன் உள்ளத்தின்னுயிரே. — (3)

சதுரமாமதிள் சூழ்இலங்கைக் கிறைவன் தலைபத்
துதிரவோட்டி, ஓர்வெங்கணையுய்த்தவன் ஓதவண்ணன்
மதுரமா வண்டுபாடமாமயிலா டரங்கத்தம்மான், திருவயிற்
றுதரபந்தம் என்னுள்ளத்துள் நின்றுலாகின்றதே. — (4)

பாரமாய பழவினை பற்றறுத்து, என்னைத்தன்
வாரமாக்கி வைத்தான் வைத்ததன்றி என்னுள்புகுந்தான்
கோரமாதவஞ்செய்தனன்கொல் அறியேன் அரங்கத்தம்மான், திரு
வாரமார்பதன்றோ அடியேனையாட் கொண்டதே. — (5)

துண்டவெண் பிறையன் துயர்தீர்த்தவன், அஞ்சிறைய
வண்டுவாழ் பொழில்சூழ் அரங்கநகர் மேயவப்பன்
அண்டரண்ட பகிரண்டத் தொருமாநில மெழுமால்வரை, முற்று
முண்டகண்டம் கண்டீர் அடியேனையுய்யக் கொண்டதே. — (6)

கையினார் சுரிசங்கனலாழியர், நீள்வரைபோல்
மெய்யனார் துளபவிரையார் கமழ்நீண் முடியெம்
ஐயனார், அணியரங்கனார் அரவினணைமிசைமேய மாயனார்
செய்யவாய் ஐயோ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே. — (7)

பரியனாகி வந்த அவுணனுடல் கீண்ட, அமரர்க்
கரிய ஆதிப்பிரான் அரங்கத்தமலன் முகத்து
கரியவாகிப்புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி, நீண்டவப்
பெரியவாய கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே. — (8)

ஆலமாமரத்தினிலைமேல் ஒரு பாலகனாய்
ஞாலமேழு முண்டான் அரங்கத்தரவினணையான்
கோலமாமணியாரமும் முத்துத் தாமமும் முடிவில்லதோ ரெழில்
நீலமேனி ஐயோ நிறைகொண்டதென் நெஞ்சினையே. — (9)

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெ
யுண்டவாயன், என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணியரங்கன், என்னமுதினைக்
கண்டகண்கள், மற்றொன்றினைக் காணாவே. — (10)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமுநிவாஹன ஸூரயே நம:

பாணன் பெருமை

(முநிவாஹன போக உபந்நியாஸ ஸாரம்)

முநிவாஹனபோகோயம் முக்தைச்வர்ய ரஸோபம:.
க்ருபயா ரங்கநாதஸ்ய க்ருதார்த்தயது நஸ்ஸதா.

முனிவாகனபோக மென்பது ஸ்ரீ வேதாந்த தேசிகர் அருளிய ரகசிய கிரந்தங்களுள் ஒன்று. திருப்பாணழ்வார் அருளிச்செய்த அமலனுதிபிரானுக்கு உரையாக வமைந்தது. முனிவாகனர் திருப்பாணழ்வார். லோகசாரங்க முனிவரின் தோளில் ஏறியிருந்து காவேரிக் கரையிலிருந்து ரங்கநாதனின் கருப்ப கிருகம் வரை எழுந்தருளினபடியால் அவர் முனிவாகனரானார். திருப்பாணழ்வார், ரங்கநாதனைத் திருவடி தொடங்கி திருமுடிவரை தெளிவாக முற்றுமனுபவித்து மெய்மறந்து ரங்கநாதனின் திருமேனியில் ஐக்கியமாய்விட்டார். முனிவாகனருடைய போகம் அதாவது (அனுபவம்) உள்ளடங்காது 'அமலனுதிபிரான்' என்னும் திவ்யப்பிரபந்தமாக வெளிப்பட்டது. அவருடைய இவ்வனுபவம் முக்தர்களுக்குப் பரமபதத்தில் ஏற்படும் பகவதனுபவம் போன்றது. அவர்கள், பகவானை முற்றாட்டாகவனுபவித்து ஆனந்தமிகுதியால் சாமகானம் பண்ணுவார்கள். அதுபோல் இவ்வமலனுதிபிரானும் திவ்யகானமாயிற்று. முக்தைச்வர்யரஸம் போன்ற இம்முனிவாகன போகம் ரங்கநாதனுடைய இன்னருளால் (மோக்ஷேச்சையுடையரான) நம்மை எப்பொழுதும் கிருதார்த்தர்களாக (பயனுற்றவர்களாக)ச் செய்யட்டும், என்பது முதலில் குறித்துள்ள சுலோகத்தின் பொருள்.

கீழ்குறித்த ரகசிய கிரந்தத்தின் முடிவிலுள்ளது. இது ஸ்வாமி தேசிகனின் அனுஸந்தான மாம்போது முனிவாகன போக மென்பது அமலனாதிபிரானைக் குறிக்கும். நம்முடைய அனுஸந்தானமாம் போது கீழ் குறித்த ரகசிய கிரந்தத்தைக் குறிக்கும். ஸ்வாமி தேசிகன் அமலனாதிபிரானை யனுஸந்தித்து அனுஸந்தித்து அதன் சாரார்த்தங்களை யெல்லாம் இதில் வெளியிடுகையாலே இக்கிரந்தமும் முனிவாகன போக மெனப்பட்டது. இப்போது, இந்த ரகசிய கிரந்தம் ரங்கநாதனுடைய கிருபையால் நம்மை எப்பொழுதும் பயனுற்றவர்களாகச் செய்யட்டும், என்பது சுலோகத்தின் பொருளாகும்.

அமலனாதிபிரானுக்கு மூன்று ஆசாரியர்கள் வியாக்கியானம் அருளிச்செய்துள்ளனர். பெரியவாச்சான் பிள்ளை, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், ஸ்வாமி தேசிகன் (வேதாந்த தேசிகர்) என்ற மூவரும் சமகாலத்தவர்கள். திரு நக்ஷத்திரத்தில் (வயதில்) சிறிது முன்னவர் பின்னவராக விருப்பார்கள். கோயிலில் (ஸ்ரீரங்கத்தில்) அவர்கள் நித்திய வாசம் செய்து வந்தவர்கள். அவ்வப்பொழுது பெரிய பெருமாளுக்கு (ரங்கநாதனுக்கு) ஆபத்து ஏற்பட்டபோதெல்லாம் பலவிதமாகச் சிரமப்பட்டு பெருமாளைக் காப்பாற்றி வந்துள்ளனர். பெரியபெருமாளை, அமலனாதிபிரானைக் கொண்டு அனுபவித்து அனுபவித்து அதன் முதிர்ச்சியில் தமக்குப்பின்னுள்ளாரும் அவ்வனுபவத்தை யிழக்கவொண்ணாதென்ற பரம கிருபையால் தங்கள் அனுபவத்தை வியாக்கியான கிரந்தங்களில் அருளிச்செய்து போந்தார்கள். அவர்கள் பரம ஸாத்விகர்கள்; பரமவிரக்தர்கள்.

“பரஸ்பரஹிதைஷிணம் பரிஸரேது மாம் வர்தய” என்று பிரார்த்திக்கும்படி பரஸ்பரம் ஹிதத்தை விரும்பு

மவர்கள். பரஸ்பரம் தங்கள் பிரீதிக்காகவும், பிறாது ஸந்தோஷானுபவத்துக்குமாகக் கிரந்தங்களை அருளிச் செய்பவர்கள். இந்த விஷயத்தை வேதாந்த தேசிகர், இந்த ரகசிய கிரந்தத்தின் ஆரம்பத்திலும், முடிவிலும் குறித்திருக்கிறார்.

"வ்யாசிக்யாஸதி பக்த்யா விரக்த தோஷாய வேங்கடேச கவி:" என்பது ஆரம்பத்தில்.

"இதி கவிதார்கிகஸிம்ஹ: ஸம்யக் வ்யாசஷ்ட

ஸாத்விகப்ரீத்யை" என்பது முடிவில்.

பெரியவாச்சான் பிள்ளை யருளிய வியாக்கியானம் ப்ரம்ஹஸூத்திரத்துக்கு ஸ்ரீபாஷ்யகாரர் அருளிய 'வேதாந்த ஸாரம்' போன்று சுருக்கமானது. அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் உரை (வியாக்கியானம்) 'ஸ்ரீபாஷ்யம்' போன்று விரிவானது. தேசிகன் அருளிய உரை வேதாந்த தீபம் போலமைந்தது. ப்ரப்ஹஸூத்திரத்துக்கு ஸ்ரீபாஷ்யகாரரொருவரே மூன்று உரையருளிச் செய்துள்ளார். அமலனாதிபிரானுக்கு மூன்று ஆசாரியர்கள் மூன்று உரை அருளிச் செய்துள்ளனர். இது விசேஷம். ரகசியத்ரயம் எவ்வாறு ஒவ்வொன்று விவரணவிவரணிபாவமாய்(சுருக்கவிரிவாய்) அமைந்துள்ளதோ, அவ்வாறே இம்மூன்று உரையும், ஒன்றில் சொல்லாததை மற்றொன்றில் எடுத்துக்கொள்ளவும், ஒன்றில் விரிவாய்ச் சொன்னதை மற்றொன்றில் சுருக்கமாகவும், சுருக்கமாய்ச் சொன்னதை விரிவாக எடுத்துக்கொள்ளவும் ஆம்படி பரஸ்பரம் உபகாரகமாயுள்ளது. இம்மூன்று வியாக்கியானங்களின் விஷயங்களைக் குறிப்பாக முனிவாகன போக விஷயங்களை முடிந்தவரை யனுபவிப்பது உத்தேசம்.

பிரமாண நூல்களுள் முதலாவது வேத நூல். வேதத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் ஓதப்படுவது பிரணவம்.

அது பிரமாணசாரமெனப்படும். பிரணவத்திலுள்ள அ, உ, ம், என்ற மூன்றெழுத்தை அமலனாதிபிரானில் முதல் மூன்று பாட்டுக்களின் முதலெழுத்தாகப் பார்க்கலாம். 'அமலன்' முதற் பாட்டு முதலெழுத்து 'அ' 'உவந்த' இரண்டாம் பாட்டு முதலெழுத்து 'உ' 'மந்திபாய்' மூன்றாம் பாட்டு முதலெழுத்து 'ம' மவில் 'அ' என்ற உயிரெழுத்துக்கு முன்னதாக உள்ள ம் என்ற மெய்யெழுத்தைக் கொள்ளவேணும். ஆகவே இப்பிரபந்தம் பிரணவார்த்த விவரண மென்னத்தகும். இவ்விஷயம் முனிவாகன போகத்திலேயே வந்துள்ளதைக் காண்க:-

"இதில் முதற்பட்ட மூன்று பாட்டுக்கு முதலான அக்ஷரம் மூலமாகிய ஒற்றையெழுத்தின் முதல் நடுவிறுதியானவை. இதில் முதற் பாட்டு திருமந்திரத்திலும் த்வயத்திலும் முமுக்ஷுவுக்கு அவச்யாது ஸந்தேயங்களான அர்த்தங்களை ஸூசிப்பிக்கிறது" பிரமாணசாரம் பிரணவம் போல் பிரமேயசாரம் ரங்கனாதனது திருக்கமல பாதத்தணிந்துள்ள பாதுகையென்று கொள்ளலாம். பாதுகையின் பிரபாவத்தையெல்லாம் வேதாந்ததேசிகர், ஸ்ரீபாதுகாஸஹஸ்ரத்தில் பரக்கப் பேசியுள்ளார். அமலனாதிபிரானில் ஐந்து ஆறு ஏழுபாட்டுக்களின் முதலெழுத்தைச் சேர்த்தால் *'பாதுகை' யென்ற சொல் பெறப்படும்.

---

*நந்தி கிராமத்தில் ஸிம்ஹாஸனத்திருந்து அரசாட்சி புரிந்து வந்த ஸ்ரீராமபாதுகைகளை யடியொற்றியடியொற்றி அவ்வப் பொழுது அங்கு வைக்கப்பட்டு பூஜிக்கப்பட்டு வந்த ஸ்ரீராமபாதுகைகள் அயோத்தியில் சித்ரசனை சுதன்வாராஜனால் பூஜிக்கப்பட்டு வந்த ஸ்ரீராமபாதுகைகள் (1089 A.D) ஸ்ரீப்ராஜ்ஞ தீர்த்தருக்கும் ஸ்ரீபராக்கிரம தீர்த்தருக்கும் அவ்வரசனால் நந்தி கிராமத்தில் காணிக்கையாகக் கொடுக்கப்பெற்றது. அப்பாதுகைகள் அன்று முதல் பாரததேசமுழுவதிலும் அவ்வப்பொழுது பல மகான்களால்

'பாரமாய' ஐந்தாம் பாட்டு முதலெழுத்து 'பா'
'துண்ட' ஆறும் பாட்டு முதலெழுத்து 'து'
'கையினர்' ஏழாம் பாட்டு முதலெழுத்து 'கை'
'சதுரமா' நாலாம்பாட்டின் முதலெழுத்தான, 'ச'

என்பது முதலாவதான பிரமாணசாரத்தையும், இரண்டாவதான பிரமேயசாரத்தையும் சேர்க்கிறது. இவ்விஷயம் உரைகளில் இல்லை. ஆசாரியர்களின் கருத்துக்களுக்குச் சேர விரோதமின்றியே அவற்றுக்குப் போஷகமாக இவ்வாறு ஊஹித்துக் கூறலாம்.

பூஜிக்கப்பட்டு (1949 A. D.) மந்திராலயத்தில் ஸ்ரீபிரம்ஹசாரி நாராயணதாஸரால் ஸ்ரீ K. ராமராஜ் அவர்களுக்கு ஸ்ரீராமத்ரயோதசாக்ஷரி மந்திரோபதேசபூர்வகம் குலதனமாகக் கொடுக்கப்பட்டது. ஸ்ரீராமபாதுகாஸேவாதுரந்தரரான ஸ்ரீ K. ராமராஜ் அவர்கள் கோயமுத்தூரில் ராம்நகர் 9/83 கோகலே வீதியில் ஸ்ரீராமபாதுகா மந்திரமான தமதில்லத்தில் அப்பாதுகைகளைப் பூஜித்து வருகின்றார். அவைகளை நந்தி கிராமத்தில் ஸ்ரீராமபிரான் குறிப்பிடுமிடத்தில் பிரதிஷ்டை செய்வது அவருடைய உத்தேசம். அதற்கு முன் ஸ்ரீராமபாதுகா பக்தர்களுடன் ஸ்ரீராமத்ரயோதசாக்ஷரீஸஹஸ்ரகோடி ஜபமும், பாதுகைகளுடன் அகில பாரத புண்ணிய பூமி பிரதக்ஷிணமும் செய்ய உத்தேசம். இது அவருக்கு ஸ்ரீராமபிரானிட்ட ஆஜ்ஞையெனக் கூறுவர். கோயமுத்தூரில் அப் பாதுகா பிரபாவத்தி லீடுபட்ட பக்தர்கள் ஸ்ரீராமபாதுகாகுலதனரான ஸ்ரீ K. ராமராஜ் அவர்களின் அனுமதியுடன் "ஸ்ரீராமபாதுகாதாஸமண்டலீ" என்ற ஸ்தாபனம் ஏற்படுத்திச் சிறப்பாக ஸ்ரீராமபாதுகாபிரபாவத்தைப் பரவச்செய்து வருகின்றனர். ஸ்ரீராமபாதுகாபிரபாவம் அளவிடவரிது. வேதாந்த தேசிகர் ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரத்தில் அனுபவித்துள்ளதை அவலம்பமாகக் கொண்டு நாம் ஸ்ரீராமபாதுகாபிரபாவத்தை அனுபவிப்போமாக.

முனிவாகன போகத்தின் ஆரம்பத்தில் "காரண விசேஷ மின்னதென்று அறுதியிடவரிதாயிருப்பதொரு பகவத்கடாக்ஷத்தாலே" என்று தொடங்கி அவதாரிகையில் அருளிச் செய்துள்ள விஷயங்களை மற்ற உரைகளில் விரிவாக நிரூபித்துள்ளபடி யனுபவிப்போமிப்போது.

"பின்பு பரமபதத்திலே பெறும்பேற்றை இங்கே பெரிய பெருமாள் திருவருளாலே பெற்று, இப்பேற்றையடி தொடங்கி அமலனாதிபிரான் முதலான பத்துப் பாட்டாலே அனுபவ பரீவாஹமாகவருளிச் செய்கிறார்" என்று ஆரம்பத்தில் கூறியபடி திருப்பாணாழ்வாரின் இவ்வனுபவம் மோக்ஷாநுபவகனரஸமே யெனக் கொண்டு ஆழ்வார் தம்மை மறந்தனுபவிக்கையாலே முடிவு பாட்டில் பெயரைச் சொல்லவில்லை, என்று முடிவில் குறித்துள்ளது, முனிவாகன போகத்தில்.

"இவ்வாழ்வார் அடியேன் என்னும தொழிய இப்பிரபந்தம் தலைக்கட்டுகிறவளவிலும் தம்முடைய பேரும் ஊரும் பேச மறக்கும்படி தாம்பெற்ற அனுபவத்துக்குப் பெரிய பெருமாள், இனி ஒருவிச்சேதம் வாராதபடி பண்ணின படியைக் கண்டு ..." என்பது முனிவாகன போகம்.

"நோபஜநம் ஸ்மரன் இதம் சரீரம்" என்று இச்சரீரத்தையும் அத்துடன் தொடர்புற்ற விஷயங்களையும் நினையாதிருத்தலே முக்தன்படியாகும். இவ்வனுபவமே, "ஸதாபச்யந்திஸூரய:" என்று பலமாகையால் பலத்துக்குப் பலம் சொல்லத் தேவையில்லாதபடியாலே இப்பிரபந்தத்துக்குப் பலம் சொல்லப்படவில்லை. பெரியவாச்சான் பிள்ளை உரையைப் பார்ப்போம். "தம்மைச் சொல்லுதல், பாட்டுக்கு ஸங்க்யை சொல்லுதல் செய்யில், கரைமேலே நின்ற அல்லாத ஆழ்வார்களோபாதியாவர்". "காட்சியொழிய

வேறொரு பலம் சொல்லாவிட்டது பலமும் காட்சியேயாகை யாலே". அனுபவரசம் தலைமண்டியுள்ள இவ்வாழ்வார் மற்ற ஆழ்வார்களைவிடப் பரமவிலக்ஷணர். இவரது இத்திவ்யப் பிரபந்தமும் மற்ற திவ்யப்பிரபந்தங்களைவிட மிகச்சிறந் தது. ஆகவேதான், ஸ்வாமி தேசிகனும் இதற்கு விசேஷித்து வியாக்கியானம் அருளிச்செய்தது.

மற்ற ஆழ்வார்களைவிடத் திருப்பாணாழ்வார் மிக உயர்ந்த வர், என்பதை அழகிய மணவாளப் பெருமாள்நாயனார் உரை யாரம்பத்தில் விரிவாக குறித்திருக்கிறது. ஒருவரைக்கூறும் போது மற்றவரை அவரினும் சிறிது தாழ்ந்தவராகக் கூறுவது பொருத்தமே. மார்கழி மாதத்தில் திருப்பாவையை யனுப விக்கும்போது ஆண்டாளைவிட மற்ற ஆழ்வார்களைச் சிறிது தாழ்ந்தவர்களாகக் கூறுகின்றோம். ஆழ்வார்கள் அனைவரும் அர்ச்சாவதாரத்தில் ஈடுபட்டாலும் முதலாழ்வார் மூவர், பரத் வத்திலே அதிகமாகவுன்றி அர்ச்சாவதாரத்தையும் ஓரளவு அனுபவித்துப் போந்தனர். திருமழிசையாழ்வார், "இனி யறிந்தேன் ஈசர்க்கும் நான்முகர்க்கும் தெய்வம், இனியறிந் தேன் எம்பெருமான் உன்னை" என்றும்

"அறியார் சமணர் அயர்த்தார் பவுத்தர்
சிறியார் சிவப்பட்டார் செப்பில்
வெறியாய மாயவனை மாலவனை மாதவனையேத்தாதார்
ஈனவரேயாதலாலின்று" என்றும்

தேவதாந்தரபரத்வநிரஸனம், பரமதநிரஸனம் இவற்றில் ஊன்றி அர்ச்சையையும் சிறிதே தொட்டுக்கொண்டார். நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், விபவத் தில் கிருஷ்ணவதாரத்தில் மண்டி அர்ச்சையையும் ஆங் காங்கு அனுபவித்துள்ளனர். மதுரகவியாழ்வார் படியை இங்குக்கூற வேண்டியதில்லை. அவர் ஆசாரியனே தமக்கெல்

லாம் என்ற சீரியதான ஆசார்யநிஷ்டைக்கு எடுத்துக்காட்டானவர். குலசேகராழ்வார், விபவத்தில் ராமாவதாரத்தில் ஈடுபட்டு அர்ச்சையையும் கைப்பிடித்திருப்பர். தொண்டரடிப்பொடியாழ்வார், அர்ச்சையை அதிலும் 'அரங்கனைப் பாடிய வாயால் குரங்கனைப் பாடமாட்டேன்' என்றபடி ரங்கநாதனையே பற்றி யிருந்தாலும் அவரது அநுபவமும், தான் பிறர் என்ற பேதபுத்திக்குட்பட்டு,

"சிலையினால் இலங்கை செற்ற தேவனே தேவனாவான்'
என்றும்,

"கற்றினம் மேய்த்தஎந்தை கழலிணை பணிமின்நீரே"
என்றும்,

"...... தலையையாங்கே
யறுப்பதே கருமங்கண்டாய் அரங்கமா நகருளானே"
என்றும் பரோபதேச பரமதநிரசனத்தோடு
"குளித்து மூன்றனலையோம்பும் குறிகொளந்
தணமை தன்னை ஒளித்திட்டேன்" என்று

தன் நிலையை நினைந்து வருந்தும்படி அளவுபட்டிருக்கும். திருமங்கையாழ்வார், அர்ச்சாவதாரத்தில் மண்டியிருந்தாலும் ஓரிடமின்றிப் பலவிடத்திலும் பரபரப்புடன் செல்பவர்.

"...... உலகமேத்தும்
கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று
மண்டினார், உய்யலல்லால் மற்றையார்க்குய்யலாமே"

என்று திருவரங்கத்தை மற்றத்திருப்பதிகளோடுமொக்கக் கூறினார். மேலும் அவர்,

"ஒரு நல்சுற்றம் எனக்கு உயிர் ஒண்பொருள்
வருநல்தொல்கதியாகிய மைந்தனை
நெருநல் கண்டது நீர்மலை இன்றுபோய்
கருநெல் சூழ் கண்ணமங்கையுள் காண்டுமே"

என்று எம்பெருமான் உகந்த ஊரெல்லாம் அவன் தாள் பாடிக்கொண்டு ஓடித்திரிந்தவர். ஆகவே அவரது அநுபவ

மும் அளவுபட்டது. இத்தால் திருப்பாணாழ்வார் மற்ற ஆழ்வார்களைவிட பகவதனுபவத்தில் தன்னையும் பிறவற்றையும் மறந்து பெரியபெருமாளிடத்து இரண்டறக்கலந்தாரென்கிற ஏற்றம் இவரொருவருக்கேயுள்ளதொன்று. இவர் ஒரே ஆனந்தானுபவமேலீட்டால் தெளிவாகப் பரப்பின்றிப் பத்துப் பாட்டில் பெரிய பெருமாளின் பரத்வத்தை நிலை நாட்டினார். நம்மாழ்வார்ப் பாட்டுக்கள்,

"முனியே நான்முகனே முக்கண்ணப்பா'' என்றும்
''அரியை அயனை அரனை அலற்றி" என்றும்

திரிமூர்த்திஸாம்ய புத்தி முதலானவற்றையுண்டாக்குவதாய் அந்தர்யாமிப்ராம்ஹணம் முதலியவற்றைக் கொண்டு ஸ்ரீபதியின் பரத்வத்தை நிலைநாட்ட வேண்டும்படி அருமைப்படப் பொருள் குறிப்பினவாகும். நம்மாழ்வார், தமக்கு நடுநடுவே பகவதனுபவம் இழந்துவிட்டதெனக் கொண்டு விரகக்கிலேசத்தாலும், தூதுவிட்டும், தாய்ப்பாசுரத்தால் தம் நிலையறிவிக்கும்படி தாம் கலங்கினதையும் கூறிப், பாசுரங்கள் இயற்றும்படி அவருடைய அனுபவமும் அளவுபட்டதேயாகும். இவ்விஷயத்தை தேசிகன் முனிவாகனபோகத்தின் அவதாரிகையில் ஒரு வாக்கியத்தில் சுருக்கமாக அருளிச்செய்கிறார். ''இப் பிரபந்தம் அதிவிஸ்தரம், அதிஸங்கோசம், அதிக்ருதாதிகாரத்வம், தூர்க்ரஹத்வம், தூரவபோதார்த்தகத்வம், ஸம்சயாதி ஜனகத்வம், விரஹக்லேசம், தூதப்ரேஷணம், பரோபதேசம், பரமதநிரஸனம், என்றாற்போலே மற்றுள்ள அத்யாத்ம சாஸ்திரங்களிலுள்ளவை ஒன்றுமின்றிக்கே அனுபவகனரஸமாயிருக்கிறது முதற்பாட்டான அமலனாதிபிரான் தொடங்கி கொண்டல் வண்ணனை, என்கிற தலைக்கட்டும் பாட்டளவும்''. இங்கு அதிக்ருதாதிகாரத்வம் என்பது சிலரேயோதலாம் என்ற நியதியுள்ள ஸம்ஸ்கிருதவேதாந்தத்

திற்குமட்டுமுள்ள தன்மையாகும். பொருளறியவரிதாயிருத்தல், வலிதில் பொருளறிய வேண்டியிருத்தல் என்ற துர்க்ரஹத்வம், துரவபோதார்த்தகத்வம் எல்லாவேதாந்தத்திற்கும் பொது. விரகக்லேசம் முதலியவை திருவாய்மொழியைப்பற்றி வந்தவை.

இன்னமும் பெரியபெருமாள், இவரைப் பரத்வாதி நிலையிலுமுள்ள ஸௌந்தர்யம் முதலான குணங்களை யெல்லாம் தன்னிடமே கண்டனுபவிக்கும்படி பண்ணி அவற்றில் கருத்துச் செல்லாதபடி யாக்கினார். இவ்விஷயம் மூன்று உரையிலுமுள்ளது. முனிவாகனபோகத்தின் முடிவில் உள்ள வாக்கியங்களைப் பார்ப்போம்.

"பெரியபெருமாள் திருமேனியிலே, திருமலை முதலாகக் கோயில் கொண்ட அர்ச்சாவதாரங்களிலும், ராமகிருஷ்ண வாமந வடபத்ரசயநாதிகளிலுமுள்ள போக்யதை யெல்லாம் சேர அனுபவித்து இவ்வாபிரூப்யத்திலே (அழகிலே) ஈடுபட்ட என் கண்கள் மற்றும் பரவ்யூஹவிபவாதிகளான திருமேனிகளையெல்லாம் சேரக்காட்டினாலும், ஸ்தனந்தயத்துக்கு (தாய்ப்பால் குடிக்கும் சிறு குழவிக்கு) போக்யாந்தரங்கள் ருசியாதாப்போலே "பாவோ நாந்யத்ர கச்சதி" என்கிறபடியே அவையொன்றும் ருசியாதென்கிறார் ஆகவுமாம். இது இவருடைய அநந்யப்ரயோஜனத்வகாஷ்டையிருக்கிறபடி".

இத்தோடு ஒற்றுமைப்பட்ட மற்ற உரை வாக்கியங்களையும் காண்போம்.

"ஸ்ரீவைகுண்டம் திருப்பாற்கடல் திருவவதார ஸ்தலம் (திருவவதாரங்கள்) உகந்தருளின திருப்பதிகள் (இவை) எல்லாம் பெரிய பெருமாளேயானைப் போலே, அவ்வோவிடங்களிலுண்டான ஸௌந்தர்ய குணசேஷ்டிதாதிகளெல்லாம் பெரிய பெருமாள் பக்கலிலே காணலாம்".

தன் நிகர்ஷம் பாராதே தன்னை விஷயீகரித்த எம்பெருமானது உபகாரத்தை முதற் பாட்டில் 'பிரான்' என்ற சொல்லால் கூறுகின்றார். இவருக்கு, தான் முன்னிருந்த நிலையை நினைத்து இப்போதைய அனுபவத்தையும் நினைத்துப் பார்த்த போது "இப்பேறுபெற நான் செய்ததொன்றில்லை; உள்ளதாகிலும் அது பெரியபெருமாளது அனுக்ரஹத்தாலாம்" என்ற உறுதியான எண்ணமுண்டாயிற்று. இவ்வெண்ணமே பிரபத்தி (திருடாத்யவஸாயம்) எனப்படுவது. மேலுண்டாகும் பயனின் கனத்தைப் பார்த்தால் அதுக்கு இதுவுமுபாயமன்று. வெறும் சிறியதொரு வியாஜமாத்திரமாகுமிது. இதுக்கு சூசகமான காயிக வியாபாரம் இருகையும்சேர்த்துக் கூப்புவது. வாசிகவியாபாரம் "ப்ரபத்யே, நம:, ஜிதம், பல்லாண்டு, போற்றி" என்று கூறுவது. இச்சிறு வியாஜமாத்திரத்தாலேயே உபயவிபூதிநாதனான தன்படியையெல்லாம் அனுபவிக்கக் கொடுத்தும், இதற்கு மேல் தனக்குக் கொடுப்பதொன்றுமில்லையே யென்று திருவுள்ளத்துத் தன்னைக் கடன்பட்டானாக நினைத்திருப்பான் எம்பெருமான். இது அவனுடைய உபகாரகத்வகாஷ்டை. முனிவாகன போகத்தின் முதற்பாட்டின் வியாக்கியான முடிவில் அடைவாக இப்பாட்டில் எம்பெருமானுடைய மோக்ஷ ப்ரதத்வகாஷ்டை முதலாக பதினெட்டு குணங்களின் காஷ்டை சொல்லப்படுகிறது, என்று நிரூபிக்குமிடத்து இவ்வர்த்தம் குறிக்கப்பட்டிருக்கிறது. "உபகாரகத்வ காஷ்டையாவது, ஒருக்ஷுத்ர வியாஜத்தையவலம்பித்து உபயவிபூதி விசிஷ்டனான தன்னை அனுபாவ்யனாகக் கொடுத்தும், அதுக்கு மேல் கொடுக்கலாவதில்லாமையாலே நித்யருணியாயிருக்கை".

இக்கருத்தைக் கொண்ட மற்ற உரை வாக்கியங்களையும் பார்ப்போம்.

“பேற்றுக்கு இத்தலையில் உள்ளது சொல்லப்பாத்தம் (ஈடு-பொருத்தம்) போராதிறே, உள்ளதுண்டாகில் அனுக்ரகத்துக்குஹேதுவாமித்தனை (அவன் அனுக்ரகத்தாலேயாமித்தனை) எதிரிகள்தாம்பாராதே, சீரியர், தந்தாம் அளவிலேயிறே கொடுப்பது”.

இக்கருத்தில்தான் முனிவாகனபோகத்திறைம்பத்தில் “ காரணவிசேஷமின்னதென்றறுதியிடவரிதாயிருப்பதொரு பகவத்கடாக்ஷத்தாலே ” என்று அருளிச்செய்தது. மேலே ஐந்தாம் பாட்டின் “ கோரமாதவஞ் செய்தனன் கொல் அறியேன்” என்றவிடத்து முனிவாகனபோக வாக்கியங்களையும் இங்கே கொள்ளத்தகும்.

“இப் பெரியபேறு பெறுகைக்கு அயோக்யனான நான் இதுக்கு அநுரூபமாய் அமோகமாயிருப்பதொரு மஹாதபஸ்ஸைப் பண்ணிப் பெற்றேனல்லேன். “இதுக்கு த்வயி விஹிதபரோஸ்மி ஸோஹம் யத:” என்றும், “தவ பரோஹமகார்ஷி ஹி தார்மிகை:” என்றும், சொல்லுகிறபடியே இப்போது நானும் பிறரும் அறியலாவது எனக்கொரு தபஸ் காண்கிறிலேன், என்று ஈச்வரனுடைய இரக்கத்தின் ப்ராதான்யத்திலே தாத்பர்யமாகவுமாம்”. இங்கு மாதவம் என்கிறது “தஸ்மாந்ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:” என்று வேதாந்தத்தில் கூறப்படும் ந்யாஸமாகும். இத்தால் சேதனன் பகவானை யடைவதோ அல்லது பகவான் சேதனனைப் பெறுவதோ எதுவாயினும் மோக்ஷ பலத்துக்கு ஒரு வியாஜமாத்திரமாகிலும் வேணுமென்பது தெரிகிறது. ராமாவதாரத்தில் ராமர், (பெருமாள்) ஸீதையை (பிராட்டியைப்) பெற சிவவில் வளைத்தல் என்ற ஒரு ஏற்பாடு இருந்ததை இதுக்கு உதாஹரணமாக, பெரியதிருமலைநம்பிகள் அருளிச்செய்த

*'ஸ்ரீராமாயணஸ்வாபதேச வியாக்கியானம்' என்னும் ரகசிய கிரந்தத்தில்

''வில் வளைக்கும் வழக்கை முன்னிட்டு (ஸீதா) பிராட்டியைப் பரிக்ரகிக்கையாலே ஈச்வரன், 'என்னாரைச் சொன்னாய், என் பேரைச் சொன்னாய், என்னடியாரை நோக்கினாய், அவர்கள் விடாயைத் தீர்த்தாய், அவர்கள் ஒதுங்க நிழலைக் கொடுத்தாய்,' என்று அஜ்ஞாத ஸுக்ருதங்களைக் கல்பித்து அதையே வழக்காக்கி ரக்ஷிப்பன், என்றும்'' என்ற வாக்கியம் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

சேதனன், தான் அறிவுடையனாவாகிதோற்ற மேல் வரும்பயனைப் பிரார்த்தித்தே பெறவேணும். இல்லாவிடில் அது புருஷார்த்தமாகமாட்டாது. புருஷனால் அர்த்திக்கப்படுமது புருஷார்த்தமாகையால் புருஷார்த்தபிரார்த்தனை சேதனனுக்கு ஸ்வபாவமாய் (இயற்கையாய்)விட்டது. எல்லாவற்றிற்கும் பகவத்பிரஸாதமே காரணம். பகவான் தடையற்ற ஸ்வாதந்திரிய குணமுடையவன். அவன், ''ஏஷ ஏவ ஸாதுகர்ம காரயதி'' என்ற வேதாந்தத்தின்படியும், ''ப்ரேக்ஷை கஞ்சித் கதாசன'' என்றபடியும், சில அதிகாரிகளை, (நம்மாழ்வார் திருப்பாணாழ்வார் போல்வாரை) விசேஷ கடாக்ஷம் செய்தருளுவதும், அடியார்களுக்குத் தான் தூதுபோயும் தேரோட்டியும் பலபடி பரிமாறுவதும் அவனது நிரங்குசஸ்வாதந்திரியத்தன்மைக்குச் சேர்ந்ததொரு குண கர்மங்களேயாகும். இக்குணம், எம்பெருமா

---

* இந்த நூல் இன்றுவரை அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை. இந்நூலை முன்னுரை, குறிப்புரை, அனுபந்தத்துடன் எழுதி அச்சுக்குத் தயாராக வைத்திருக்கிறது. [ஸ்ரீ ராமானுஜ மிஷன் வெளியீடாக அச்சிட்டு வெளியிட உத்தேசம். திரவிய ஸாத்தியமாகையால் திரவியத்தை எதிர்பார்த்து நிற்கிறது. திருவருள் கூட்ட வேணும்]

னது ஆச்ரிதபக்ஷபாதித்வகாஷ்டை, எனப்படும். "ஆச்ரிதபக்ஷபாதித்வகாஷ்டையாவது, ஆச்ரிதஸங்கல்பத்தோடே விரோதித்த தன்ஸாமான்யஸங்கல்பத்தை அஸத்கல்பமாக்கி அநிதரஸாதாரணமான ஆபிமுக்யத்தைப் பண்ணுகை" என்பது முனிவாகனபோக வாக்கியம். அனைத்துக்கும் அவனது பிரஸாத விசேஷமே(அனுக்கிரக விசேஷமே) காரணம். இவ்வெண்ணமே உறுதிபயப்பது. மேல் திருப்பாணாழ்வாரின் வைபவத்தையனுபவித்துவிட்டு அமலனாதிபிரான் பாட்டுக்களில் ஆங்காங்கு சிற்சில விசேஷவிஷயங்களை யனுபவிப்போமாக.

"அணியரங்கன் என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்று மற்றொன்றில் கண் செல்லாத இவர் படியே இவருக்கு முன்னவரான தொண்டரடிப் பொடியாழ்வார்,

"இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகமாளும் அச்சுவைபெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே" என்று நிரூபித்தார்.

"வைகுண்டவாஸேபி ந மேபிலாஷ:" என்று, நம் ஆசாரியர்கள் படியுமதுவே. ஸ்ரீராமாயணத்தில் திருவடி (ஹநுமார்) "பாவோ நாந்யத்ர கச்சதி' என்று தனக்கு மோக்ஷம் வேண்டாம். ராமன் அணைந்த இந்த சரீரத்தோடே இராம காதை நடைபெறுமிடத்து முன்னிருந்து கொண்டு இங்கேயேயிருக்கிறேன், என்று இவ்வர்த்தத்தை வெளியிட்டார். அத்தியாபகர்கள் பாட்டுவிடாமலிருப்பதற்காக அடிவரவை நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருப்பார்கள். இப்பிரபந்தத்துக்கு அடிவரவு "அமலன், உவந்த, மந்தி, சதுர, பார, துண்ட, கை, பரி, ஆல, கொண்டல், (கண்ணி)" என்பது. புழுக்குறித்தது எழுத்தாமாப்போலே என்பது ஒரு

நியாயம். ஸம்ஸ்கிருதத்தில் குணக்ஷாரந்யாயம் என்பது. மணலில் புழுவொன்று தாறுமாறாகப்போனதிலும் தற்செயலாய் ஓரெழுத்தின் வடிவம் படிவதுபோல் அமலன் உவந்த மந்தி என்ற அடிவரவிலும் தற்செயலாய் (கோல்விழுக் காட்டிலே) ஓர் பொருள் கிடைக்கிறது. அமலனை ராமபிரான் உவந்த மந்தி குரங்கு ஹநுமார் (திருவடி) எனப் பொருள் கிடைப்பதாலே ஹநுமாரின்படி திருப்பாணாழ்வாருக்கு ஏற்பட்டது போலே நமக்கும் ஏற்படவேணும் என்பது குறிக்கப்பட்டதாகிறது.

திருப்பாணாழ்வார், எம்பெருமானது திருமார்பிலுள்ள ஸ்ரீவத்ஸம் என்னும் திருமறுவினம்சமாய், கார்த்திகை மாதம் ரோகிணிநாள் ஸ்ரீரங்கத்துக்கருகிலுள்ள சோழர்களின் தலைநகரமாயிருந்த கோழியென்னும் நிசுலாபுரியான உறையூரில் வயலின் செந்நெற்கதிர்களின் நடுவே தோன்றியவர். அயோனிஜர். பாணர் வகுப்பைச் சேர்ந்த ஒருவர் செந்நெற்கதிரையறுக்க வந்தபோது இவரைக் கண்டு அன்புடன் எடுத்துப்போய் தானும் தன் மனைவியுமாக சீராட்டிப் பாலூட்டி வளர்த்து வந்தனர். நாளடைவில் இவர், தான் வளரும் பாணர் வகுப்புக்குச் சேர யாழ்வாசிப்பதில் வல்லவரானார். முன்பு பாராதிருந்தாலும் உழவலன்பாலும், அரங்கன் மெய்யடியார்களான வருவார் செல்வார் சொல்லக்கேட்டும் ரங்கநாதனிடம் பேரமர்காதல் பூண்டவரானார். இம் மாதிரி பேரன்பு முன்பு காணுவிஷயத்திலும் பல முற்பிறவித் தொடர்பால் ஏற்படுகிறது. (பிசிராந்தையாருக்கும் கோப்பெருஞ்சோழனுக்கும் ஏற்பட்ட அன்பு இத்தகையது, என்பதைத் தமிழ் நூல்களில் பார்க்கிறோம்.) இவர் காவேரியின் கரையிலிருந்தே யாழ்மீட்டி ரங்கநாதன் விஷயமாகப் பலபாடல்களைப் பாடுவார். அப்பொழுது சிலநேரம் மெய்மறந்து பகவதனுபவத்தில் ஆழ்ந்துவிடுவார். ஆகவே இவருக்குத்திருப்பாணாழ்வார்

எனப்பெயர் வந்தது. இவர், நைச்சியம் பாவித்து அற்
பத்தர் சுற்றி வாழும் ஸ்ரீரங்கத்தேபோவதுகூடாதென
காவேரிக் கரையிலேயே நின்றவர். இத்தால் சாதாரண இ
வுலக மக்களின்படியும் ஒருவாறு தற்செயலாய் செய்ததா
வாயிற்று. இவரை ஒருநாள் அளவில் ரங்கநாதன் தன்னிட
ஐக்கியமாக்கிக்கொள்ள நினைத்து, விபீஷணாழ்வானை மகாரா
ரான சுக்கிரீவனையிட்டு "ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட" என்
அழைத்துக்கொண்டாப் போலே, இவரது மகிமைக்குச் சேர
தனது அந்தரங்க கைங்கர்யபரரான லோகசாரங்க முனிவ
அருள்பாடிட்டு "நீர் போய் நம்பாணனை யழைத்து வாரும்
என்று நியமித்தார். அவரும் "நாயந்தே நாயந்தே" என்
விண்ணப்பித்துக் கொண்டு இவரிடம் சென்று பெருமாள் நி
மனத்தை விண்ணப்பிக்க இவரும் தமது ஸ்ரீவைஷ்ணவ தா
யத்தை நினைத்து முதலில் நைச்சியம் பாவித்தார். "இவரு
பெரியபெருமாள் கௌரவத்தைக் குலைக்கவொண்ணாதென்
முனிவாகனராய் வந்து புகுந்து பெரியபெருமாளைத் திருவ
தொழு" என்ற அழகியமணவாளப்பெருமாள்நாயனா
உரைப்படி லோகசாரங்கமுனிவர் இவரைத் தம் தோளிலே
எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவந்து பெருமாள் தி
முன்பே நிறுத்தினார். இவர் முனிவரின் செய்கையை மறுக்
திருந்ததின் மூலம் முனிவரைக் கௌரவித்தவரானார். முனி
இவரைத் தம் தோளில் எழுந்தருளப் பண்ணின மூலம் கௌ
வித்தார். இருவரும் பகவந்நியமனப்படியிருந்து பெருமாளை
கௌரவித்தார்கள். இக்கருத்தில் முனிவாகனபோகத்தி
முடிவில்

'முனிமஹிதஸாகவிகாதாதசகமிதம் தேஸிகோபஜ்ஞ
என்று 'மஹித' என்ற பதத்தைப்பிரயோகித்தது. இ
பெரியபெருமாளை முற்றாட்டாகவனுபவித்துஅப்படி

பெரியபெருமாளிடம் ஐக்கியமாகிவிட்டார். (மறைந்துவிட்டார்) இத்தால் இவர் பாண் பெருமாள் எனவும் அழைக்கப் பெறுவர். இதுதான் சரித்திரம். மற்றதெல்லாம் வதந்திபோல் ஒன்று பலவாக உருவெடுத்து விசுவரூபமாய்ப் பரவிவிடுமென்கிற உலகவியற்கைக்குச்சேர வந்ததெனக்கொள்ளவேண்டும். இவர் அருளிய திவ்யப்பிரபந்தம் 'அமலனாதிபிரான்' என்று ஆரம்பிப்பதால் 'அமலனாதிபிரான்' என்று பெயர் பெற்றது. இது, அல்பஜ்ஞர்களாய் அல்பசக்திகர்களானநாம் அநுஸந்திக்கப்பாங்காய்ப் பரப்பின்றிப் பத்துப் பாட்டாய் நமக்கும் இவரநுபவத்தைக் கொடுப்பதாயிருக்கிறது. இதை 'தேசிகோபஜ்ஞம்' என்றபடி ஆசாரியர்களது உபதேசபரம்பரா மூலமாக அவர்களது வியாக்கியானத்துடன் அநுபவிப்பது நமது கடமையாகும். இவர், பிரகிருதிதத்வஸ்ரூபகமான ஸ்ரீவத்ஸமெனும் திருமறுவினம்சமானமையாலும், தோற்ற முறைமையாலும் நித்யஸூரியாய் நித்யநிர்தோஷர். இவர், தம்மை "குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன்" என்று நைச்சியம் பாவித்திருப்பர். பெருமாளும் இவரை அப்படியே நினைத்திருப்பர்; நாலுவருணத்தில் அடங்காதவர்கள் நித்தியஸூரிகளாகையால் அவர்கள் நினைவு யதார்த்தமேயாகும். இக்கருத்தில் முனிவாகனபோகத்தின் ஆரம்பத்தில்

"முதிதமுகுந்தவிலோகன முனிவாஹனஸூரி

ஸூக்திமிமாம்" என்று இவரை 'ஸூரி'

யெனக்குறித்தது. மற்ற உரைச்சொற்றொடரும் இங்கே காணத்தக்கது.

"இவர், தம்மை நாலுவர்ணத்திலும் புறம்பாக நினைத்திருப்பர்; பெரிய பெருமாளும் அப்படியே நினைத்திருப்பர்; (நினைத்திருந்தார்) நித்தியஸூரிகள் நாலு வர்ணத்திலுமுள்ளாரல்லரோ" என்று. இனி அமலனாதிபிரான் பாட்டுக்களின் ஸாரார்த்தங்களைச் சிறிது அநுபவிப்போம்.

அமலனாதிபிரானை யனுபவிப்பதற்கு முன்பு அதையருளி வரை நினைப்பதும், பரவுவதும் வணங்குவதும் பொருத்த ஸ்ரீராமாநுஜரது ஸமாச்ரயணாசாரியரான பெரியநம்பிக இவர் விஷயமாக ஸம்ஸ்கிருத சுலோகமொன்றும், ஸ்ரீராமாநு ரது அம்மானும், ஸ்ரீராமாயணார்த்தோபதேசாசாரியருமா பெரியதிருமலைநம்பிகள் தமிழ்ப் பாட்டொன்றும் அருளிச்செ துள்ளனர். அது தனியன் எனப்படும். சிறப்புப்பாயிர போன்றது. அதை முதலில் அநுஸந்திப்பது முறை.

“ஆபாதசூட மனுபூய ஹரிம் சயானம்
மத்யே கவேரதுஹிதுர் முதிதாந்தராத்மா,
அத்ரஷ்ட்ருதாம் நயனயோர் விஷயாந்தராணாம்
யோ நிச்சிகாய மநவை முனிவாகனம் தம்”.

உபய காவேரியின் நடுவே அரங்கத்தரவணையில் சயனித்துள் கண்டவர் சிந்தைகவரும்எம்பெருமானை அடிமுடியாகவனு வித்து ஆனந்தமுற்றமனமுடையரான முனிவாகனர் (திருப் ணாழ்வார்) தமது கண்களுக்கு ரங்கனாதனைத் தவிரமற்றவிஷய களைக் காணாத் தன்மையை நிச்சயித்தவர். அவரை தியான செய்கிறேன், என்பது சுலோகத்தின் பொருள். இங்குள் முதித என்ற பதத்தைத் திருவுள்ளத்தே கொண்டு முனிவாக போக ஆரம்பசுலோகத்தில் “முதிதமுகுந்தவிலோகனமு வாஹனஸூரி” என்று ‘முதித’ என்ற பதத்தைப் பிரயோகி தது. தமிழ்ப் பாட்டு.

“காட்டவே கண்டபாதகமல, நல்லாடை, யுந்தி,
தேட்டரு முதரபந்தம், திருமார்பு, கண்டம், செவ்வாய்,
வாட்டமில்கண்கள், மேனி, முனியேறித் தனிபுகுந்து
பாட்டினால் கண்டுவாழும் பாணர்தாள் பரவினோமே”

லோகசாரங்க முனிவரின் தோளின்மேல் எழுந்தருளி வ புகுந்து தன்கிருபையால் ரங்கநாதன் இவருக்கு அ

புறத்தும் தன்னைக்காட்ட ஒவ்வொரு அவயவமாகக் கண்டனுபவித்தும், திருமேனிமுற்று மனுபவித்தும், தமக்கொப்பார் மிக்காரையின்றி அத்விதீயராய் வாழ்ந்துபோன அமலனாதிபிரான் பாடிய பாண்பெருமாள் திருவடியைப் பரவுகின்றோம் நாம், என்பது பாட்டின் பொருள். உழுவலன்பால் முன்பேமான ஸஸாக்ஷாத்காரமாக அதாவது நேரே கண்ணால் காண்பது போன்ற உருவெளிப்பாட்டில் ரங்கனாதனைத் தெளிந்த அகக்கண்ணால்கண்டு ஒன்பதுபாட்டும்பாடினார் என்பதுவும், முனிவாகனராய் வரும்போது வழியில் ஒன்பது பாட்டுப் பாடி-னார் என்பதுவும், கருப்பகிருகத்தில் திருமணத்தூணை பற்றி நின்று நேரே புறக்கண்ணால் கண்டு பத்துப் பாட்டும் பாடினார் என்பதுவும், ஒன்றுக்கொன்று விரோதமின்றி பொருந்தக் கூடியதே. ஒன்று மானஸஸாக்ஷாத்காரம். மற்றொன்று பாஹ்யஸாக்ஷாத்காரம். பாஹ்யஸாக்ஷாத்காரத்திலும் மனஸ் ஸஹகாரம் தேவையானமையின் முன்னதான மானஸஸாக்ஷாத்காரமுமுண்டு. இவ்விஷயம் 'ஒக்கின்றதே' என்ற முதற் பாட்டின்கடைசிச்சொல்லை விவரிக்கும்போது உரைகளில் குறிக்கப்பட்டுள்ளது. அங்கேவிளக்கமாய்ப்பார்ப்போம். இப்பொழுது முதற்பாட்டையனுஸந்திக்கலாம்.

"அமலனாதிபிரான் அடியார்க்கென்னை ஆட்படுத்த
விமலன், விண்ணவர்கோன் விரையார் பொழில் வேங்கடவன்,
நிமலன், நின்மலன் நீதிவானவன் நீள்மதிளரங்கத்தம்மான், திருக்
கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளன ஒக்கின்றதே" (1)

இப்பாட்டில் எம்பெருமானுக்கு அமலன், விமலன், நிமலன், நின்மலன், என நாலு பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. அமலன் என்பதற்கு அகிலஹேயப்ரத்யனீகன் (கெட்ட குணமொன்றும் தட்டாதவனாய் அதற்கு மாறுபட்டவன்) என்ற பொருளை மூன்று உரையிலும் காணலாம். இதற்கு

"தானொருத்தன் சுத்தனாகையன்று; தன்னோடு
ஸம்பந்தித்தாரையும் சுத்தராக்கவல்ல வலியுடைமை"

என்ற நாயனாருரைப்படியும், முனிவாகனபோகத்தின்படியும் பகவானுடைய மோக்ஷப்ரதத்வம் அமலன் என்னும் சொல்லுக்குப் பொருளாகச் சொல்லப்படுகிறது. ஆதி என்பதற்கு பெற்ற பாவிக்கு விடப்போமோ என்றார், என்று பகவானுடைய ஜகத்காரணத்வம்பொருளாகச்சொல்லப்படுகிறது. பகவானுக்கு மோக்ஷப்ரதத்வம்,ஜகத்காரணத்வம் இவ்விரண்டும் சத்திரசாமரம் போன்றபரத்வநிர்ணயகமான சின்னங்கள், (அடையாளங்கள்) பிரான் என்பதற்கு சேதனனுடைய ஸத்தையேபிடித்துநோக்கிக்கொண்டு பகவந்நித்திய கைங்கர்ய பிராப்திரூபமோக்ஷபர்யந்தம்தருவதான எம்பெருமானது உபகார பரம்பரை பொருள்.

அடியார்க்கென்னை ஆள்படுத்த விமலன் என்பது பகவத்சேஷத்வம் நிலைநிற்கும்படியாக பாகவதசேஷத்வபரியந்தம் தன்னைப் பகவான் ஆக்கிவைத்தபடியைச்சொல்லுகிறது. "ஒரு க்ஷேத்திரம் பத்தெட்டுக்கிரயஞ் சென்றால் மீளவிரகில்லை" என்ற உதாஹரணத்துடன் இதை நிரூபித்துள்ளனர் பிள்ளையும், நாயனாரும். என்னை என்பது முன்பு நான் ஸ்வதந்திரனாய் பிரகிருதிக்கே (தேகத்துக்கும், அத்துடன் தொடர்புற்றவைகளுக்குமே) தொண்டுபட்டிருந்த என்னை, என்று பொருளைக் குறித்து இப்படிப்பட்டவனை எம்பெருமான் தனக்கும் தன்னடியார்களுக்கும் சேஷமாக்கினான் (ஆளாக்கினான்) என்று எம்பெருமானின் ஸௌசீல்யகுணத்தைக் குறிக்கிறது. மேலும் அரசர்கள் நல்ல பொருளைப் பெற்றால் அந்தப்புரத்துக்கென்று ஒதுக்குமாப் போலே எம்பெருமான் தனக்குகந்த பாகவதர்களுக்கு என்னை யடிமையாக்கினான் என்றும் பொருள்படும். இங்கு பாகவதர் லோகசாரங்க முனிவர். முனிவர் தோளில் இருந்தாலும் இவர் அவருக்குச் சேஷப்

பொருளே. திருத்துழாய் திருவபிஷேகத்தில் இருந்தாலும் அது சேஷப்பொருளேயல்லவா?

விண்ணவர்கோன், விரையார் பொழில்வேங்கடவன், நீள்மதிளரங்கத்தம்மான் என்று ரங்கனாதனின் வரத்து கூறப்படுகின்றது. பரமபதத்திலேயிருந்து திருமலையிலே வந்து நின்று நல்லிடம் பார்த்து காவிரி நடுவு பாட்டு ஸம்ஸாரத்தைக் கிழக்கெடுத்தல்லது பேரேனென்று: அரங்கத்தரவணையில் சயனித்தான் எம்பெருமான். இப்பாட்டில் விரையார்பொழில் வேங்கடவன்; அடுத்த பாட்டில் கடியார்பொழிலரங்கத்தம்மான். ஆகவே எம்பெருமான் நறுமணம் மிக்க பூங்காவிலே வர்த்திப்பன். (இருப்பன்) ஒவ்வொரு திவ்யதேசமும் ஒவ்வொரு பூங்கா. "ஆராமம் சூழ்ந்த அரங்கம்" என்று திருமங்கையாழ்வார் இவ்வர்த்தத்தை சூசிப்பிக்கிறார். 'ஸர்வகந்த:' என்று வேதாந்தம் கூறும் நறுமணங்கமழும் எம்பெருமான், பூங்காவிலே தான் இருப்பன் என்பது பொருத்தமே. வாசஞ்செய் பூங்குழலாளான பிராட்டியுடன் இணைபிரியாத எம்பெருமானது போகஸ்தானம் பூங்காவாவது மிகப்பொருத்தமேயாம்.

நிமலன் என்பது எம்பெருமான் அடியார்களை ரக்ஷிக்கும் போது அவர்களிடம் ஒன்றையும் எதிர்பாரான் என்பதையும், நின்மலன் என்பது அப்படி ரக்ஷிப்பதைத் தன்பேறாக ரக்ஷிப்பான் என்பதையும் குறிக்கின்றன. அடியார் என்பது உண்மையாக அடிமைசெய்ய ருசியுடையரான மெய்யடியாரைக் குறிக்கிறது. போலியடியாரையல்ல. இங்கு முனிவாகனபோக வாக்கியம் "நிமலன் – தன் ஈச்வரச் சுணையாகிற ஆச்ரயண விரோதி தோஷத்தை மறைத்து "அர்சகபராதினாகிலாத்மஸ்திதி:" என்கிறபடியே ஆச்ரித பாரதந்த்ரியத்தை வெளியிட்டு நிற்குமவன்." திருமலையில் குறும்பறுத்த நம்பி என்னும் மெய்யடியனான குயவன் ஒருவன் சமர்பித்த மண்ணாலான பூவைத் திரு

மலையப்பன் திருமுடியில் தரித்தான் என்பது ஓர் ஐதிஹ்யம். இது முனிவாகனபோகத்திலேயே வந்துள்ளது. வஞ்சமுக் குறும்பாம்வித்யாமத, தனமத, அபிஜன ஜன்மமதங்களாம் குறும்பை யறுத்த ஸத்துவகுண பரிபூர்ணனானவன் குறும்பறுத்த நம்பி என்பவன்.

''நின்மலன்' அவிஜ்ஞாதா என்றும், என்னடியார் அதுசெய்யார், என்றும் சொல்லுகிறபடியே ஆச்ரிதருடைய தோஷதர்சன மாகிற சரண்ய தோஷமில்லாதவன்''.

நீதிவானவன் நீள்மதிளரங்கத்தம்மான் என்பது எம் பெருமானது மேன்மையையும் நீர்மையையும் சேரப்பிடித்துக் காட்டுகிறது. பகவான்சேஷி (யஜமானன்) நாம் அவனுக்குச் சேஷம் (அடிமை) என்ற நீதி வழுவாது செல்லும் பரமபதத்தி லிருப்பவனே திருவரங்கத்துள்ளான். ''அளப்பரிய ஆரமுதை அரங்கமேய அந்தணனை'' என்று திருமங்கையாழ்வார் பகவானது மேன்மையையும் நீர்மையையும் சேரப்பிடித்துக் காட்டியுள்ளார். ''நீள்மதிளரங்கத்தம்மான் இப்பாசுரங் கேட்டுப் போலே காணும் திருமங்கையாழ்வார் திருமதிள் செய்தது, அழகிய வாயாலே இது அருளிச்செய்த பின்பாகாதே திருமாளிகைகளும் திருக்கோபுரங்களும் கனத்தது'' இது நாயனார் உரை. திருமலை போக்கியதை தமக்கு நிலமல்லாமையாலும், திருமலை ஏற்றமாய் தாம் நடைபோகமாட்டாதவரானமையாலும் மீண்டும் கோயிலிலே புகுகிறார். வெள்ளத்தே தத்தளிப்பவர் ஒரு மேட்டிடம் தட்டுப்பட்டால் அதில் கால்பாவுமாப்போலே அரங்கனது அழகுவெள்ளத்தில் தத்தளிக்குமவர் திருமலையில் கால்பாவினார். அது பொதிமணலாய் மடுவில் ஆழ்த்துவதாயிருந்தது. ஆகவே திரும்ப ரங்கனுதனைப் பற்றுகிறார். இக் கருத்து, பிள்ளை திருநறையூர் அரையர் என்னும் ஆசாரியருடையது. திருக்கமலபாதம் என்பதற்கு அழகியபாதகமலம்

எனவும், திருவுக்குக்கையில் பிடிக்கவல்ல லீலாகமலம் போன்ற பாதகமலம் எனவும் பொருள் கொள்ளலாம். பிராட்டியும் கூசிப்பிடிக்கும் எம்பெருமானின் மெல்லடி வந்து என் கண்ணினுள்ளன ஒக்கின்றதே.

"வந்துனதடியேன் மனம் புகுந்தாய் புகுந்ததற்
பின் வணங்கும் என் சிந்தனைக்கினியாய்"

என்கிறபடி எம்பெருமான் போல் அவனது திருவடியும் என் கண்ணுள்ளே வந்து தனது சொந்த இடத்திற்போலே பொருந்தியிருக்கிறதே என்ன ஆச்சரியம், என்று ஈடுபடுகிறார். திருவடிக்குத் திருஷ்டிதோஷம் வரலாகாதென்று கண்ணை மூடிக்கொண்டேன். கண்ணினுள்ளே அது விளங்குகிறது. இத்தால் திருவடிக்கு ஸௌசீல்யகுணலாபமும் எனக்கு ஸ்வரூபலாபமும் கிடைத்து பலம் இருதலைக்கும் ஒத்தது. மேலும் முன்பு மானஸ ஸாக்ஷாத்காரத்தில் (உருவெளிப் பாட்டில்) எப்படி ஸேவை சாதித்ததோ அப்படியே இப்பொழுது பாஹ்ய ஸாக்ஷாத்காரத்திலும் ஸேவை சாதித்து ஒத்துள்ளது. ஆழ்வார்கள் பாசுரங்களில் ஒரிரு பாசுரங்கள் ஒரேரீதியாய் அமைந்துள்ளதைப் பார்க்கிறோம். அதுக்கு அவர்களது ஒத்த பகவதனுபவம் காரணம். அதுபோல் திருப்பாணாழ்வார் முன்பு மானஸானுபவத்தில் பாடின பாட்டும் ஒத்த பகவதனுபவமூலமாய்க் கொண்டு ஒரேரீதியாயமைந்த சொற்றொடரைப் பெற்றது. ஆகவே 'அமலனாதிபிரான்' என்று தொடங்கி 'மற்றொன்றினைக்காணாவே' என்ற வரை இப்பிரபந்த ஆநுபூர்வீ எந்த சமயத்திலும் ஏற்பட்டிருக்கலாம். விரோதமில்லை. இனிமேல் இரண்டாவது பாட்டுத் தொடங்கி ஆங்காங்கு சிற்சில விசேஷார்த்தங்களையனுபவிப்போம். (2)

நாயனார், ஒவ்வொரு பாட்டின் அவதாரிகையிலும் ஆழ்வாரது திருக்கண் முதலிய கரணங்கள் எம்பெருமானது ஒருறுப்

யைவிட்டு மற்றொரு உறுப்புக்குப் போவதற்குக் காரணம் சொல்வது அழகியதாயிருக்கும். அதன்படி அனுபவிப்போம். அப்பொழுதீன்றபசு, தன் கன்றுக்குப் பால் குடிக்க வாசனையில்லாமையாலே முதலில் தானே தன் முலைக்காம்பை அதின் வாயிலே வைக்கும். பின்பு சுவடறிந்ததும் கன்றுதானே தாய்ப் பசு காற்கடை கொள்ளினும் மேல்விழும். அதுபோல் பகவத் விஷயத்தில் சுவடறியாத என்னை வந்து திருக்கமலபாதம் ஆட்கொண்டது. பிறகு என் சிந்தைதானே அத்துடன் தொடர்புற்ற திருவரையில் பொருந்திய பீதாம்பர ஆடையின் செவ்வியில் ஈடுபட்டதென முதல் இரண்டு பாட்டுக்கும் ஸங்கதியை (தொடர்பை)ச் சொல்லுகிறார். ஓர் அவயவத்திலிருந்து மற்றொரு அவயவத்துக்கு போவது அதன் போக்கியதை (இனிமை) அளவுபட்டு அனுபவித்து முடிந்துவிட்டதாலோ, இவரது ஆசை குறைவுபட்டதாய் அது போதுமென்று எண்ணி கைவாங்கினதாலோ, என்று கூறவியலாது. பகவதவயவ ஸௌந்தரியமும் எல்லையற்றது. இவரது ஆசையும் சூழ்ந்ததனிற்பெரியது. கடலில் அலையிலகப்பட்ட துரும்பு அலையால் அலைக்கப்பட்டு கரை சேருவதும் திரும்பக் கடலில் போவதும் செய்கிறது, கடலாழத்தை அளந்துவிட்டதென்பதாலல்ல. அதுபோல திருப்பாணாழ்வாரின் கண் சிந்தை முதலான கரணங்கள் அரங்கனின் அழகு வெள்ளத்தில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு அலை பாய்கின்றன. இப்பொழுது இரண்டாம் பாட்டை யனுஸந்திப்போம்.

> "உவந்தவுள்ளத்தனாய் உலகமளந்தண்டமுற
> நிவந்த நீண்முடியன் அன்று நேர்ந்த நிசாசரரைக்
> கவர்ந்த வெங்கணைக்காகுத்தன் கடியார்பொழிலரங்கத்தம் மானரைச்
> சிவந்த ஆடையின் மேல் சென்றதாமென சிந்தனையே"

எம்பெருமானுடைய திருமேனி "அவிகாராய சுத்தாய" என்று விகாரமற்று ஒருபடிப்பட்டதாயினும் தன்னை ஆச்ர

யித்தவர்களுக்காக (அண்டினவர்களுக்காக)க் காரியஞ் செய்யும் போது சிறுப்பது பெருப்பதாகாநிற்கிறது. இது எம்பெருமானது ஸத்யஸங்கல்பத்தாலாவது. ஆச்ரிதகாரியஞ்செய்வதில் எம்பெருமானுக்கு மிகவும் உவப்பு. தன்னையழிய மாறியும் பிறர்க்கு உவந்து உபகாரஞ் செய்வோன் உத்தமன். இதை ஆண்டாளும் "ஓங்கியுலக ளந்தஉத்தமன்" எனவருளினாள்." ந தஸ்ய ப்ராக்ருதா மூர்த்தி: மாம்ஸமேதோஸ்தி ஸம்பவா" என்று மனுஷ்ய சரீரம் போன்ற அமைப்புடையதானாலும் எம்பெருமானது அவதாரசரீரம் அப்ராகிருதசரீரமே. யாசிக்கப் போகும்போது யாசகம் மிகத்தாழ்ந்ததாகையால் உடல்குன்றிவிட்டது. கேட்டது பெற்றதும் சந்தோஷ மிகுதியால் உடல் பெருத்துவிட்டது. இத்தால் நிமிஷந்தோறும் மாறுமதான பிராகிருத சரீரம் போன்றதாய்விட்டது எம்பெருமானது சரீரமும். அவன் திருமுடி அண்டமுற நிவந்த (வளர்ந்த) போது அதில் அணிந்துள்ள கிரீடமும் வளர்ந்தது. இது அவதார பிரயோஜனத்தில் சாதுபரித்ராணம். மேலே துஷ்டநிக்கிரகம். நாலாவது பாட்டில் ராவணவதம் கூறப்படுகிறபடியால் இங்கு கரதூஷணவதபர்யந்தமாகக் கொள்ளலாம். இங்கேயதையும் சேர்த்துக் கூறி விசேஷித்து மறுபடி ராவணவதம் கூறப்படுகிறது எனவும் கூறலாம். வழியில்படும் மண்ணாங்கட்டியைக் காலால் இடறுமாபோலே வழியில் நேர்ந்த விரோதிகளை நிரசித்துச்சென்ற படியைக் குறிக்கிறது. ஒரு படியாலும் அநுகூலமாகாதபோது விரோதியாய் நேர்ந்த நிசாசரர், எனவும், ஆச்ரித விரோதியாய்க் கொண்டு தனக்கு விரோதியாய் நேர்ந்த நிசாசரரெனவும் பொருள் கூறக்கூடும். வால்மீகி முதலில் 'கோகுணவாந், கச்ச வீர்யவான்' என்று கேட்டதற்கு உத்தரம் போன்றுள்ளது இவ்விரு விருத்தாந்தமும். முதலில் எம்பெருமானது சீலகுணம். இரண்டாவதில் வீரியகுணம்.

"கடியார் பொழிலரங்கத்தம்மான்" என்பதற்கு முனிவாகன போகம் ரஸமாக அனுபவிக்கத்தகும்.

"ஸூரிகள் முதலாக ஸ்தாவரரூபங்களைக்கொண்டு நித்யாமோதராயிருக்கிற ஆராமங்களாலே சூழப்பட்ட கோயிலாழ்வாருக்குள்ளே ப்ரஹ்மாதிகள் ஆராதிக்கஸர்வஸ்வாமித்வம் தோற்றக் கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாளுடைய" என்பது. கோயிலில் முமுக்ஷுக்கள் மனிதர்களாயும், முக்தர்கள் திர்யக்குகளாயும் நித்யஸூரிகள் ஸ்தாவரர்களாயும் தேசகாலோசிதமான பல சரீரங்களைப் பரிக்ரஹித்து எம்பெருமானுக்கு கிங்கர வ்ருத்திகள் செய்கின்றனர் என்ற கருத்துள்ள பட்டர் ஸ்ரீஸூக்தியை நினைவிற்கொள்ளலாம். இங்கு. "சென்றதாமெனசிந்தனையே" என்பதால் நான் தூண்டப் போகவில்லை; அதுதானே விஷயத்தின் அழகை நோக்கிச் சென்றது. இனி என்னாலும் மீட்கப் போகாது. முன்பு ஹீனமாய் அப்ராப்தமான ஆடையின் மேல் சென்ற என் சிந்தை இப்பொழுது ப்ராப்தமாய்ச் சிறந்ததான எம்பெருமானுடையின் மேல் சென்றதே என்ன பாக்கியம் என்று கொண்டாடுகிறார். நோயின்நீங்கியவன் பசியெடுத்து சோறு பிடிக்க, 'சோறின் மேல் என் மனம் சென்றது,' என சந்தோஷப்படுமாப்போலே சந்தோஷப்படுகிறார். கீழ்பாமரு மூவுலகுமளந்த பற்பபாதம். மேலே பாமரு மூவுலகும் படைத்த பற்பநாபி. நடுவில் சிவந்த பீதாம்பரம், தாமரைகளின் செவ்வியையும் பெற்று மரகதப் பச்சை மலையின் தாழ்வரையில் செவ்வானம் படர்ந்ததுபோல் மனோரம்யமாயுள்ளது.

"குறைகொண்டு நான்முகன்" இத்யாதிகளிற்படியே ப்ரஹ்மா திருவடி விளக்கி ஆராதகனானபடியும், ருத்திரன் தீர்த்த பிரஸாதம்பெற்று பூதனானபடியும் சொல்லிற்றாயிற்று" இத்தால் ஸ்ரீமன் நாராயணனே பரதத்துவமென்றதாயிற்று. (2)

மேலே ஆடையோடு தொடர்புற்ற திருவுந்திமேல் என்னின்னுயிர் ஈடுபட்டதென்கிறார்.

"மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர்கள்
சந்திசெய்ய நின்றான் அரங்கத்தரவினணையான்,
அந்திபோல் நிறத்தாடையும் அதன்மேல் அயனைப்படைத்த தோரெழில்
உந்தி மேலதன்றோ அடியேன் உள்ளத்தின்னுயிரே".

எம்பெருமானுக்கு அடியான் நான் என்ற அறிவில்லாது உண்டியே உடையே உகந்தோடி "கதாகதம் காமகாமாலபந்தே" என்றபடி போவது வருவதாய் ஸம்ஸார சக்கிரப்ரமணசீலர்களான ஸம்ஸாரிகளுக்கு உதாஹரணமாயுள்ளன. மந்திகள், குரங்குகள். பலாமரத்தின் முழுவதும் பழமுள்ளமையின் இக்கரைக்கக்கரை பச்சை, என்ற கணக்கில் இங்குமங்கும் பாய்ந்து ஒன்றையும் பூர்த்தியாய் அனுபவியாத குரங்குகள்போல்வனர் தான் ஒன்றிலும் பூரணானுபவமில்லாத ஸம்ஸாரிகளும். வடவேங்கடமாமலை என்று செந்தமிழ் திவ்யப்பிரபந்தம் அவதரித்தற்குக் காரணமான ஆழ்வார்கள் அவதரித்தற்குக் காரணமான ஆழ்வார்கள் அவதரித்த தமிழ்கூறு நல்லுலகமான தென்னகத்துக்கு வடவெல்லை திவேங்கடமென்பது தமிழ் நூல்களில் தெளிவு. அங்கு குன்றிலிட்ட விளக்காய் விளங்கும் திருவேங்கடமுடையானின் நீர்மையையனுபவிக்க நித்தியசூரிகள் கீழிறங்கி ஸன்னிதி கோபுரவாயிலிலே நிற்க, அடியாரான மானிடர்கள் எம்பெருமானது மேன்மையையனுபவிக்க மேலே வந்து கோபுரவாயிலிலே நிற்க இருவரும் தம்மிடம் சந்திசெய்ய நின்றான் திருமலையப்பனான ஸ்ரீநிவாஸன். குருடர்களுக்காக வைத்த அறச்சாலையில் மிளிர்கண்ணர் புகுரலாமோ என வானவர்களுக்கு முகம் கொடாது ஸம்ஸாரிகள் பக்கலிலும், தன்னிடமிருந்து ஒவ்வொருபலனைப்பெற்றுப்போகும் அதிகாரிகள் பக்கலிலும், தன்னையே பற்றி மோக்ஷ பலம் பெற

விழையும் முமுக்ஷுக்கள் பக்கலிலும் இன்னருள் சுரந்து முகங்கொடுத்து நிற்கின்றான். இப்படி பலதரப்பட்ட தன்மையரான இவ்வுலக மக்கள் தங்கள் ஸ்வபாவ நியதிப்படி செய்யும் காரியங்களையும் தன்னதாகக் கொண்டு சமயத்தில் எல்லாரையும் ஆட்கொள்ள நினைத்து எம்பெருமான், கோயில் திருமலை முதலான திவ்ய தேசங்களில் வளைப்புக் கிடக்கிறான். பரதன் சித்திரகூடத்தே ஸ்ரீராமபிரானையழைத்துக்கொண்டல்லது திரும்பேன் என வளைப்புக் கிடந்ததுபோலே யுள்ளது இது. இவ்விதம் இவ்வுலகைக் காக்கும் காரணம், உலகைத் தன் திருவயிற்றில் பிரளயத்தே வைத்து ரக்ஷித்துத் திரும்ப ஒப்பற்ற அழகியநாபியிலிருந்து பிரமனைப்படைத்து அவன் மூலம் உலகைப் படைத்த குடற்றொடக்கேயாகும். திருமலையப்பனும், அரங்கநகரப்பனும் ஒருவரேயானபடியால் பிள்ளை அழகிய மணவாளர் அரையர் ஒரு தரம் திருமலைக்குப் போய் வருகிறேன் என்று ரங்கனுதனிடம் விண்ணப்பிக்க ஒரு தரம் அமலனாதிபிரானைப் பாடிவிட்டுப்போமென்று அவன் சொல்ல அப்படியேயானபிறகு, போம் அல்லது இரும் என அரங்கன் அருளிச்செய்தான். இவ்வைதிஹ்யம் நாயனார் உரையில் உள்ளது.

"எம்பெருமான் திருமேனி மயில் கழுத்துச் சாயலாயிறே யிருப்பது" என்ற நாயனார் உரை ஸ்வாமி தேசிகன் கோதாஸ்துதியில் அருளிச் செய்த "தூர்வாதலப்ரதிமயா" என்ற சுலோகத்தின் பொருளைக்கருத்தில் கொண்டதாகலாம். ஆடை, அத்தேகநிறத்துக்குப்பரபாகமாய் (எடுத்துக்காட்டாய்) அந்திகாலசெவ்வானம் போன்றுள்ளது.

கீழேயனுபவித்த ஆடையைப் பிடித்துக் கொண்டு உந்தி மேல் சென்று அத்துடன் தொடர்புற்ற திருவயிற்றுதரபந்தத்தை மேலே யனுபவிக்கிறார். பீதாப்பரமும் உதரபந்தமும்

எம்பெருமான் திருமேனியில் நித்தியமாய்ச் சேர்ந்துள்ளமையின் அவைகமுற்றவுமாம்படியானாலும் உறுப்புக்களோடொக்க அனுபவிக்கலாம். பகவானை ரசித்தலைமயின் ஆழ்வார் தன்னை இன்னுயிர் என்கிறார். உள்ளத்து என்பது 'ஹிருதயத்து' என்று உயிரின் இருப்பிடத்தையும் 'மனத்து' என்று உயிரின் அறியப்படுமிடத்தையும் குறிக்கும். (3)

எம்பெருமானது திருவயிறு, பிரம்ஹாவையுண்டாக்கின நாபியும் என்னிடத்ததன்றோ! என்னிடம் தாயான யசோதை கண்ணிநுண் கயிற்றினால் கட்டினதாலுண்டான தழும்புமுண்டன்றோ! ஆகவே எம்பெருமானுக்குள்ள மேன்மையையும் நீர்மையையும் காட்டுமது நானென்று எனக்குப் பட்டமும் கட்டியுள்ளதே பாராய் என ஆழ்வாரைத் தன்னிடம் இழுக்க அதிலே ஈடுபட்டு அதன்பட்டமான உதரபந்தத்திலீடுபடுகிறார் நாலாம் பாட்டில்.

"சதுரமாமதிள்சூழ் இலங்கைக்கிறைவன் தலைபத்
துதிரவோட்டி ஓர் வெங்கணையுய்த்தவன் ஓதவண்ணன்
மதுரமாவண்டு பாடமா மயிலாட ரங்கத்தம்மான் திருவயிற்
றுதரபந்தம் என்னுள்ளத்துள் நின்றுலாகின்றதே"

எந்திரப்பொறிகள் பொருந்தி நற்சதுரமாய் உயர்ந்த மதிளாலே சூழப்பெற்றமையின் காவலுண்டென்று மதித்து துஷ்டராக்ஷஸஜாதிகள் ஒருங்கு வசிக்குமிலங்கைக்குத் தலைவன் என மிக மதித்துப்போரும் ராவணேசுவரன் தலைபத்தையும் பனங்காய் உதிர்வதுபோல் உதிரும்படி. எம்பெருமானது கருத்தை யோர்ந்து கருதுமிடம் பொருதுமதான வெம்மையம்பை எய்து ராவணனை நிரசித்து ஆச்ரிதனை ஸ்ரீவிபீஷணாழ்வானை உய்த்தவனைபடியால் கடல்நிறவண்ணங்கொண்டு விளங்குமவன் அரங்கத்தம்மான். ராவணனை முதல் நாள் போரில் இன்றுபோய் நாளை வா என ஓட்டி மறுநாள் நிரசித்தான். இந்த ராவணவத விருத்தாந்தத்துக்கு உட்கருத்தாக ஒரு விஷயம் கூறப்

படுகிறது. சஞ்சல சித்தனை ராவணன் சஞ்சலமான மனதுக்கு நிதர்சனம் ஆனவன் (எடுத்துக்காட்டானவன்) பத்துத் தலை என்பது மனதுக்கு உபகரணங்களான பத்து இந்திரியங்களைக் குறிக்கிறது. பெருமாள் (ராமன்) அம்பால் ராவணனை மாய்த்தானென்பது, ஆசாரியன், விவேகபுத்தி உபதேசத்தால் திரிமனமுடையனை சிடனைத் திருத்திப்பணிகொள்வதை எடுத்துக் காட்டுகிறது. "மனோஜனிசரனை விவேகசரஜாலத்தாலே சமிப்பித்தான் என்கிறார்" என்பது சூத்திரம் போன்றதான நாயனாருரை வாக்கியம், "ப்ரஹ்லாதிகளையெல்லாம் அகம்படியிலேகதேசத்திலே வைத்துய்யக்கொண்ட ஸ்ரீமத்தையுடைத்தான திருவயிற்றினுடைய சிறுமைபெறுமைகளுண்டான அகடிதகடனாசக்திக்கு அடையவளைந்தான் போலேயிருக்கிற உதரபந்தம்" என்கிற முனிவாகனபோகம் குறிக்கொள்ளத்தக்கது. ஸ்ரீரங்கத்தில் ஏழாவது பிராகாரமான சித்திரை வீதியைச் சுற்றியும் வெளியே அடையவளைந்தான் என்ற வீதியுள்ளது. "ஸ்ரீவைகுண்டநாதன் பெரியபெருமாளானவாறே நித்யஸூரிகளும் வண்டுகளும் மயில்களுமானபடி" என்பது பிள்ளையுரை. "இவ்வூரில் வர்த்திக்குமவர்களுக்கு ஸாரஸ்யமும் செருக்குமேயாயிருக்குமித்தனை" என்பது நாயனார் உரை. ஆடிப்பாடி அரங்கவோ என்றழைக்கும் தொண்டர்களுக்கு உவமமாயிருப்பவை வண்டுகளும் மயில்களும். எம்பெருமானது திருவயிற்றுதரபந்தம் என்னுடைய ஸூக்ஷ்மமான தகராகாசத்தில் விசாலமாய் உலாவுகின்றது, சொந்த இடத்திற்போல் என்ன ஆச்சரியம் என்று ஈடுபடுகிறார். (4)

எம்பெருமானது திருமார்பானது, நாமன்றே திருவையும், ஸ்ரீவத்ஸகௌஸ்துபமுகத்தாலே பிரதானத்தையும் சேதனத்தையும் தாங்கிக்கொண்டு தொங்கலும் தனிமாலை

பூர்ண வைஜயந்திவனமாலைகளையேந்தி எம்பெருமானது பாதத் துவத்தை நிலைநாட்டிநிற்கின்றோம் எனக்காட்டி ஆழ்வாரைத் தன்னிடம் இழுக்க இழுப்புண்டு தன் ஸ்வரூபமான பகவத் தாஸ்யத்தைப் பெற்றபடியையநுஸந்திக்கிறார், ஐந்தாம் பாட்டில்,

"பாரமாய பழவினை பற்றறுத்து என்னைத் தன்
வாரமாக்கி வைத்தான் வைத்ததன்றி என்னுள் புகுந்தான்,
கோர மாதவஞ் செய்தனன் கொல் அறியேன்
அரங்கத்தம்மான், திரு
வாரமார்பதன்றோ அடியேனை ஆட்கொண்டதே."

கனமிக்க மூட்டைபோல் வெகுகாலமாகச் சம்பாதித்துள்ள என் பழவினையையெல்லாம் பாவக்காடு தீக்கொளீவேகின்றதால், என்னும்படி நீறுகும்படி செய்து என்னைத் தனக்குரிய அடித் தொண்டனாக்கினான், எம்பெருமான். மேலும் என்னுள்ளே புகுந்து என்னை நியமித்துப்போருகிறான். இப்படி அவன் செய்யக்காரணமாக நானும் பிறருமறியலாம்படி ஒரு நற் காரியம் நான் செய்ததாக எனக்குத்தெரியவில்லை. ஒருவேளை அவன் என்னைப் பெற ஆற்றின் இடைக்குறையில் சயனித்து மாதவம் புரிந்தனனோ என்னவோ? என்னே அவனது பெருங்கருணை என ஈடுபடுகிறார். இப்பாட்டில் என்னுள் புகுந் தான் என்கிற சொற்றொடர் உயிர்போன்றது. எம்பெருமா னது அந்தர்யாமிபிராப்ஹணத்தில் சொல்லப்படும் வியா பகத்வசக்தி இப்பாட்டில் கூறப்படுகிறது, என்பது மூன்று உரைகளிலும் வந்துள்ளது. பிராட்டி கடாக்ஷம் பெறு முன்பு திருவடி "தூதோஹம்ராமஸ்ய" என்றான். பிராட்டி கடாக்ஷம் பெற்றபிறகு "தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய" என்றான். ஆகவே ஸ்வரூப ஞானம் பெறும் முமுக்ஷுவுக்கு முதலில் பிராட்டி புருஷகாரம் வேண்டும். அதற்காகவேதான் பிராட்டி

எம்பெருமானது திருமார்பைவிட்டு இறையுமகலாதிருப்பது. திருவாரமார்பதன்றோ என்பதற்கு அழகு பொருந்திய மார்பு, திருமகள் (பிராட்டி) வாழும் மார்பு என இரு பொருளும் கொள்ளலாம். மேலே ஆறும் பாட்டையனுஸந்திப்போம். (5)

"துண்ட வெண்பிறையன் துயர் தீர்த்தவன், அஞ்சிறைய
வண்டு வாழ் பொழில் சூழ் அரங்கநகர் மேயவப்பன்,
அண்டரண்ட பகிரண்டத்தொருமாநிலமெழுமால் வரை, முற்று
முண்டகண்டம் கண்டீர் அடியேனையுய்யக் கொண்டதே"

மூன்றும் பிறைச் சந்திரனையணிந்து போகபரவசனான ருத்திரனின் மாபாவம்விட பிச்சைபெய்து வாழ்வித்தவன் எம்பெருமான் கோபாலகோளரி. அவனே ரங்கநாதனுமாம். அல்லது ஸ்ரீரங்கமாகாத்மியத்தின்படி சந்திரனின் க்ஷய ரோகத்தைப்போக்கி வாழ்வித்தவன் ரங்கநாதன் எனவும் கொள்ளலாம். பிரளயத்தில் ஒரு பொருளும் அழியாவாறு ஒன்றுவிடாமல் எல்லாம் தன் வாயில் புகுமளவும் அங்காந்திருந்தான் எம்பெருமான். அவன் ஒவ்வொன்றாக உண்டவுலகை என் என்பது என அப்போக்கியதையிலே ஈடுபட்டு அண்டமென்று பொதுவாகச் சொன்னது மட்டுமன்றி அண்டத்துள்பட்ட எழுமால் வரை முதலியவற்றைத் தனித்தும் சொல்லுகிறார். ஒருமாநிலம் என்பது பிரமன் தொடங்கி எறும்புவரையிலும் அவரவர்கள் தங்கள் தங்கள் இடம் இது எனத் தங்கள் வாழுமிடத்தையபிமானித்து அதிலே இனிது போரும்படி இடமுடைத்தான நிலம் என்பதைக் குறிக்கும். வேதாந்தமும்,

"யஸ்யப்ரம்ஹச க்ஷத்ரஞ்ச உபேபவத ஓதந: ம்ருத்யுர் யஸ்யோபஸேசனம் கஇத்தாவேத யத்ரஸ:" என்று ஈடுபடுகிறது. ம்ருத்யு-யமன் ஊறுகாய் ஸ்தானம். எல்லாவற்றையும் உள்ளே விழுங்க வைத்துத் தானும் விழுங்கப்படுவது ஊறு

காய். பிரளயத்தில் உண்டதானாலும் இப்போதும் அப்படிப்பட்டது கண்டம் என்னலாம். விடுகாதானாலும் முன்பு தோடிட்ட காது என்னலாமே. அதுபோலே பெரியபெருமாளுடைய கண்டம் முற்றமுண்டகண்டம் என்கிறார். 'வண்டுகளோவம்மின்' என்கிற முமுக்ஷுக்களான ஸாத்விகர், ஸம்யஜ்ஞானஸத்கர்மங்களாகிற மோக்ஷபரிகரங்களைக் கொண்டு வாழுகிறபடியைச் சொல்லிற்று. "பெரியபெருமாளுக்கு ஆபரணமாய் ஊருக்கும் ஆபரணமாயிருக்கும் சோலை; சோலைக்கு ஆபரணமாய் இருக்கும் வண்டுகள்; வண்டுகளுக்கு ஆபரணமாயிருக்கும் அழகிய சிறகெள்கை" என்கிற நாயனார் உரை அழகியது. ஆகாயத்தில் பறக்க இறக்கைகள் சாதனம். அதுபோல் ஞானகர்மங்கள் பகவதாராதனரூபங்களாய் மோக்ஷமார்கமாகின்றன. "அறுகால சிறுவண்டே" என்று வண்டுக்கு ஆறுகால். த்வயமந்திரத்தில் ஆறுபதமுள்ளது. ஆகவே த்வய நிஷ்டரான முமுக்ஷுக்கள் ஷட்பதநிஷ்டராய் அறுகால சிறுவண்டே என்னப்படுமவர்கள். எம்பெருமானது திருக்கழுத்து, ஆழ்வாரை நாமன்றோ ஹாரங்களைத் தாங்கி நிற்பது. பிராட்டியும் திருமார்பிலிருந்து என்னை அணைக்கின்றனளே. பாண்டவர் தூதுவிட்ட மடக்கோலையும் நம்மிடம் காணலாமல்லவா? இந்த நீர்மை மற்ற உறுப்புக்களுக்குக் கிடையாவே, பிரளயத்தில் முற்பட ரக்ஷித்தது நாமன்றோ என்று தன் மேன்மையையும் நீர்மையையும் காட்டித் தன்னிடம் அழைத்து வாழ்வித்துய்யக்கொண்டது. மேலே ஏழாவது பாட்டுக்குப் போவோம்.

(6)

எம்பெருமான் திருக்கைகளைப்பற்றி மேலேயேறி திருமுடிவரை அழகையனுபவிக்க எண்ணின என்னை நடுவே செய்யவாய் கொள்ளை கொண்டது. என் சிந்தையைப் பறிகொடுத்தேன் என்றீடுபடுகிறார். எம்பெருமானது செய்ய

வாயானது, 'நீர் மார்பிலே கையை வைத்துப் பயங்கெட்டுத் தூங்கும்படி "ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமிமாசுச:" என்றது நாமன்றோ; "ராமோத்விர்நாபிபாஷதே," "அந்ருதம் நோக்தபூர்வம்மே" என்று எம்பெருமானும் நம்பிக்கை வைக்கும்படியன்றோ நம்முடைய யதார்த்தத்தன்மையிருப்பது என்று மயக்கி ஆழ்வாரைப் பறித்துக்கொண்டது.

"கையினார் சுரிசங்கனலாழியர், நீள்வரை போல்
மெய்யனார் துளபவிரையார் கமழ் நீண்முடி எம்
ஐயனார், அணியரங்கனார் அரவினணை மிசை மேய
மாயனார், செய்யவாயையோ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே"

கையில் பூவேந்தினாற்போலே ஆயுதங்கள் பொருந்தியுள்ள அழகைக் கையினார் சுரிசங்கனலாழியர் என்கிறார். சங்குக்குச் சுரி எப்படி இயற்கையோ அப்படி சக்கிரத்துக்கு எதிரிகளின் மேல் அனலுமிழ்வது இயற்கை. பச்சைமாமலைபோல் மேனியை அனுபவிக்க பரபாகமாய் சந்திரசூரியப்பிரகாசம் போன்ற வெளிச்சம் உள்ளது என்பது கருத்து. இங்கு பெரிய பெருமாள் கையில் சங்கு சக்கிரமுண்டோ; பெரிய பெருமாள் த்விபுஜராயன்றோ சேவை சாதிப்பது. ஒரு கையால் விரையார் திருத்துழாய் மாலையணிந்த பரத்வசூசகமான கிரீடத்தைக் காண்பித்துக் கொண்டும், ஒரு கையால் திருவடியைக் காண்பித்துக் கொண்டுமல்லவா கிடந்ததோர் கிடக்கை, என்று இரு கையினராய் சயனித்துள்ளார் பெரிய பெருமாள். ஆழ்வார் சதுர்புஜராய் (நான்குகையினராய்) அனுபவிப்பது எப்படிப் பொருந்தும் என ஒரு சமயம் அனந்தாழ்வான் பட்டரைக் கேட்டார். பெரிய பெருமாள் த்விபுஜரானால் ஸ்ரீவைகுண்ட நாதன் த்விபுஜனாகவேண்டுமே. அவனேயல்லவா பெரிய பெருமாள். ஸ்ரீவைகுண்டநாதன் த்விபுஜனா? சதுர்புஜனா? என்பது கேள்வி. பட்டர், ஸ்ரீ பரமபதநாதன் த்விபுஜனில்

பெரியபெருமாளைப் போல், சதுர்புஜனாகில் பெருமாளைப் போல் என்று சமாதானம் அருளிச்செய்தார். ஸ்ரீரங்கத்தில் மூலவருக்கு பெரியபெருமாள் என்றும் உத்ஸவருக்கு பெருமாள் என்றும் வியவகாரம். உண்மையில் பெரிய பெருமாளும் சதுர்புஜரே. நம்மைவிடத் தெளியக்கண்டவர்கள் சதுர்புஜராகவே கண்டுபேசியுள்ளபடியால். "தமஸ: பரமோ தாதா சங்கசக்ரகதாதர:" என்று பரமபதத்தில் எம்பெருமான் சதுர்புஜனேயாகவேணும். முனிவாகனபோகத்தில் ஸ்வாமிதேசிகன், மற்றொருவிதமாகவும் நிர்வகிக்கிறார். பெரியபெருமாளுடைய திருக்கைகளில் ரேகை வடிவில் சங்கு சக்கிரங்கள் விளங்குகின்றன. பெருமாளின் திருக்கைகளில் தனிவடிவமாகத்தோன்றுகின்றன. ஆகவே த்விபுஜரான பெரியபெருமாளும் கையினார்சுரிசங்கனலாழியர் என்பதில் விரோதமில்லை. "திவ்யாயுதாழ்வார்கள் பெரியபெருமாளுடைய திருக்கைகளில் ரேகையில் ஒதுங்கிக் கிடந்து; பெருமாள் திருமேனியிலே தோன்றி நிற்பர்கள்" என்பது முனிவாகன போகம். எனக்கு எல்லாவித உறவுமுறைமையுமாய், பூமிக்கு ஆபரணம் போன்றும், ஸம்ஸாரிகளும் ஆச்ரயிக்கலாம்படி சமீபத்துள்ளதுமான திருவரங்கத்து சேஷசாயியாய், ஆச்சர்யகுண விசிஷ்டனாய் உள்ள எம்பெருமானுடைய செய்யவாய் என்னைச் சிந்தை கவர்ந்தது. ஐயோ என்பது பலமின்மையின் தாம் முற்றும் அனுபவிக்கப் போகாமையால் வருத்தத்திலுமாம்; ஆச்சரியத்திலுமாம். (7)

மேலே எட்டாம் பாட்டு, எம்பெருமானது திருக்கண்களின் அழகை நிரூபிக்கிறது. அது ஆழ்வாரைத் தன்னிடம் பித்தராக்கிவிட்டது. உண்மையில் இந்தப் பைத்தியம் வேண்டப்படுவதேயாகும். உலகத்தாருக்கு நான் பித்தனானால் எனக்கு உலகம் பித்துப்பிடித்ததாகிறது. இக்கருத்தைக்

குலசேகராழ்வார். "அரங்கனுக்கடியார்களாகி அவனுக்கே பித்தராமவர் பித்தரல்லர்கள் மற்றையார் முற்றம் பித்தரே" என்று அறுதியிட்டார். (தீர்மானித்தார்) பாட்டை அனுசந்திப்போம்.

"பரியனாகி வந்த அவுணனுடல் கீண்ட, அமரர்க்
கரிய ஆதிப் பிரான் அரங்கத்தமலன் முகத்துக்
கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி, நீண்டவப்
பெரிய வாய கண்கள் என்னைப் பேதமை செய்தனவே"

எம்பெருமானது வார்த்தை உண்மையானது என நம்புவது அவன் பராத்பரன் என அறிந்த பின்பல்லவா? வேதம் நம்மைக் கொண்டே "தஸ்ய யதாகப்யாஸம் புண்டரீகமேவம் அக்ஷிணீ" என்று எம்பெருமானை பராத்பரனாக (பரம்பொருளாக) தீர்மானிக்கிறது. மேலும் ஒருவன் பிரம்ஹஞானமின்மையாகிற அஸத்தன்மை நீங்கி பிரம்ஹஞானமுண்டாகி ஸத்தாவதற்கு நம் பார்வை முன்னம் வேண்டும் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. இந்த என் பிரபாவத்தைப் பாராய் என எம்பெருமானது திருக்கண்கள் ஆழ்வாரை நோக்க ஆழ்வார் தான் அக்கண்ணழகிலே மயங்கிவிட்டேன் என்கிறார். தன் மகனை சிறுவன் பிரஹ்லாதனிடமும் பரிவின்றி சினம் மிக்கு இத்தூணிலிருப்பானோ நீ கூறும் நாராயணன் என, ஆம் இருப்பன் என்ன அது மெய்யாகவேண்டி அங்கப்போதே தோன்றி இரணியன் மார்பகங்கீண்டு பிரஹ்லாதனின் விரோதியை நிரஸனம் செய்தருளினன், எம்பெருமான். எம்பெருமானது காதளவும் நீண்ட செவ்வரியோடிய கண்கள் என்னை மயக்கிற்று என்கிறார். இங்கு நாயனார் உரையில் பட்டரின் ரங்கநாதனது திருக்கண்கள் விஷயமான சுலோகத்துக்கு உரையாக வந்துள்ள வாக்கியங்கள் இனிமை பொருந்தியவை. அவற்றை இங்கு அனுபவிப்போம். "பெரியபெருமாளுடைய திருக்கண்களானவை திருச்செவியளவுஞ் செல்ல நீண்டிருக்கிறபடிக்கு ஒரு நினைவு

உண்டு என்கிறார் பட்டர். அதாவது பெரிய பெருமாளுடைய திருக்கண்களானவை, மீனுக்குத் தண்ணீர் வார்ப்பாரைப் போல நித்யஸூரிகளுக்கு முகம் கொடுத்துக்கொண்டிருக்கிற ஸ்ரீவைகுண்டநாதனுக்கும் கண்ணிரண்டாய், ராமக்ருஷ்ணாத்யவதாரங்கள் பண்ணி குஹாதிகள் விதுராதிகள் தொடக்கமானார் சிலருக்கு அல்பகாலம் முகம்கொடுத்து விஷயீகரித்து, வந்தாற்போலே வெறுங்கையோடே போனவர்களுக்கும் கண்ணிரண்டாய், ஸம்ஸாரம் கிழங்கெடுத்தல்லது எழுந்திரேனென்று கோயிலிலே அர்ச்சாரூபியாய் அவ்வவர் நிகர்ஷங்களைப் பாராதே முகம் கொடுத்துக்கொண்டுகிடக்கிற பெரியபெருமாளுக்கும் கண்ணிரண்டாயிருக்கவோ; இவனுடைய க்ருபையைப் பார்த்தால் உடம்பெல்லாம் கண்ணாகவேண்டாவோ என்று பார்த்து, எல்லா மண்டலங்களும் தங்களுக்கேயாகவேணும் என்றிருக்கும் ராஜாக்கள், முற்படத் தங்களுக்கு ப்ரத்யாஸன்னரான (பக்கத்திலுள்ள) வன்னியரை (மாற்றரசரை) அழியச்செய்யுமாபோலே பெரியபெருமாளுடைய அவயவாந்தரங்கள் அடைய நசமேயாகவேணும் என்று பார்ச்வஸ்தங்களாய் (பக்கத்திலே இருப்பனவாய்) இருக்கி(ன்)ற திருச்செவிகளாகையாலே அவற்றை வென்று அவ்வருகே போகவதாக முற்பட அவற்றுடனே அலையெறிகிறாப் போலேயாய்த்து திருக்கண்கள் செவிகளளவும் நீண்டிருக்கிறபடி." (8)

மேலே ஒன்பதாம் பாட்டில் எம்பெருமானது நீலத் திருமேனி, மணியாரமுத்துத்தாமம் முதலான பரிகரங்களைக் கொண்டு என்னெஞ்சை நிறைகொண்டது என்றனுபவிக்கிறார். பாட்டையனுஸந்திப்போம்.

"ஆலமாமரத்தினிலைமேல் ஒரு பாலகனாய்
ஞாலமேழு முண்டான் அரங்கத்தரவினணையான்
கோலமாமணியாரமும் முத்துத்தாமமும் முடிவில்லதோரெழில்
நீலமேனி ஐயோ நிறைகொண்டதென் நெஞ்சினையே"

ஒரு பாலகனாய் என்பதற்கு யசோதாஸ்தனந்தயனை கிருஷ்ணன் ப்ரோடன் — பெரியவன் என்னலாம்படி வடசல சாயி கண்ணன் தனியொருபாலன்.

ஞாலமேழுமுண்டான் என்பதற்கு சிறு குழந்தைகள் கண்முன் தென்படும் பொருளையெல்லாம் எடுத்து வாயிலே போட்டுக்கொள்ளுமாபோல் தன் பாலியத்துக்குச்சேர எம்பெருமான் ஏழுலகையுமுண்டான் என்பது பொருள். இந்த சரிதத்தைத்திருமங்கையாழ்வார், திருக்கோவலூர் பதிகத்தின் முதற்பாட்டின் முன்னடியில் குறித்திருக்கிறார்.

''மஞ்சாடுவரையேழும் கடல்களேழும்
வானகமும் மண்ணகமும் மற்றுமெல்லாம்
எஞ்சாமல் வயிற்றடக்கி ஆலின் மேலோ
ரிளந்தளிரில் கண்வளர்ந்த ஈசன் தன்னை''

என்று அனுஸந்தித்துள்ளதை இப்பொழுது அனுபவிக்கலாம்.
(9)

கடைசியாகப் பத்தாம் பாட்டில் மேகம் போன்ற நிறமும் தன்மையும் உடையவராய் கோகுலத்தில் வெண்ணெயுண்டவாயனாய் பிடிபட்டு ஆய்ச்சிகண்ணிக்குறுங்கயிற்றால் கட்டுண்ட தன்மையால் என்னுள்ளங் கவர்ந்தவனாய் தேவாதிதேவனாய் என்னமுதான அரங்கநகரப்பனைக்கண்ட என் கண்கள் மற்றொன்றினைக் காணாவே என்று அப்படியே பெரிய பெருமாளிடம் அந்தர்தானமாய் (மறைந்து)விட்டார், திருப்பாணாழ்வாராகிற பாண்பெருமாள்.

''கொண்டல் வண்ணனைக் கோவலனாய்வெண்ணெ
யுண்டவாயன், என்னுள்ளங்கவர்ந்தானை
அண்டர்கோன் அணியரங்கன் என்னமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''

இப்பவும் பெரிய பெருமாள் திருமுகத்தில் வெண்ணெய்முடை நாற்றங் நாறுமென்று நம் ஆழ்வார், ஆசாரியர்களின் ஈடுபாடு. ஸ்ரீராமாநுஜர் தென்னரங்கன் செல்வமுற்றும் திருத்தி வைத்தவர். ரங்கநாதனுக்குத் திருமஞ்சன காலத்து ஈரவாடையைக் களையும்போது மேலே உலர்ந்த வாடையைச் சாற்றிய பிறகே களையச் செய்தார். ரங்கநாதனது திருவயிற்றிலுள்ள தழும்பை ஒருவரும் காணலாகாதென்று கருத்து. கிருஷ்ணாவதாரத்தில் கோபிகா வஸ்திராபஹார சேஷ்டிதத்தின்போது கோபிகைகள் கண்ணனைக் கூறைவேண்ட, தருகிறேன் என்று சொல்லி அவன் ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குத் தாவும்போது உடை நெகிழ்ந்துவிட வயிற்றிலுள்ள தழும்பைக் கண்டு தங்கள் துன்பத்தையும் சிறிதே மறந்து கோபிகைகள் கொல் என்று சிரித்தனர். உடனே கண்ணன் துணுக்கென உடையை உடுத்திக்கொண்டான். பெண்களான எங்களை இப்போது துன்புறுத்துகிற ஆண்மையை யசோதையிடம் காட்டிற்றிலையே அவள் கட்டவெட்டென்றிருந்து தழும்பேறப்பெற்றாயே, என்று எம்பெருமானது ஸௌசீல்ய குணத்தில் ஈடுபட்டனர் கோபியர். மேலும் எம்பெருமான், தான் யசோதையின் அடிமை என்பதையறிவதற்கு இலச்சினையான தழும்பைக் காட்டி நம்மை தனக்கு அடிமையாக்கிக் கொள்கிறான். நமது பகவத்சேஷத்வத்தையறிவதற்கு திருவிலச்சினை, தோளில் எம்பெருமானது சங்குசக்கிரப் பொறியொற்றிக்கொள்வது. இவ்வைதிஹ்யங்கள் திருப்பாவை ஐந்தாம் பாட்டின் 'தாமோதரனை' என்ற பதவியாக்கியானத்தில் குறிக்கப்பட்டுள்ளது. பிரதி வருஷம் மார்கழிமாதம் பல தடவை திருப்பாவையின் விசேஷார்த்தங்களையனுபவிக்கிறோம். ஆகிலும் தெவிட்டாத அமுதுபகவத்விஷயம், அப்பொழுதைக்கப்பொழுதென் ஆராவமுதமே, என்றும் ஆராவமுதே, என்றும் எம்பெருமானுக்கு ஆராவமுது என்பது தனியொரு திருநாமம்.

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்.

திருவரங்கம் பெரியகோயில் (ஸ்ரீரங்கம்)

ஸ்ரீரங்கே ரங்கநாத: பணிபதிசயனே தக்ஷிணாம்வீக்ஷமாண:
காதம் சீதாம்சுதீர்த்தம் ப்ரணவபரிணதம் தத்விமாநம்ச
திவ்யம்.
ஆத்யம் வ்யக்தம் ஸ்வயஞ்ச ஸ்தலமதிசுபதம் நாயகீ ரங்கபூர்வா
பூமேர் வைகுண்டமேதத் ஜகதி விஜயதே ஸஹ்யஜேந்
துப்ரஸந்ந:.

பெருமாள் — ரங்கநாதன், அழகியமணவாளன்
நாச்சியார் — ஸ்ரீரங்கநாயகி
விமாநம் — பிரணவாகார விமானம்
தீர்த்தம் — சந்திரபுஷ்கரணி, உபயதிருக்காவேரி
திருக்கோலம் — புஜங்கசயனம்
திருமுகமண்டலம் — தெற்கே திருமுக மண்டலம்.
ப்ரத்யக்ஷம் — தர்மவர்மாவுக்கும், காவேரிக்கும்,
விபீஷணனுக்கும், சந்திரனுக்கும் பிரத்யக்ஷம்.
மங்களாசாஸனம் — ஆழ்வார்கள் அனைவரும் மங்களாசாஸனம்
மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரைத் தவிர தேவு மற்றறியாதவர்.

சீர்வந்த உந்தித்திசை முகனால் அல்லாதென்
சோர்வந்த சொல்லிற் சுருங்குமோ — ஆர்வம்
ஒருவரங்கங் கோயிலுகந்தவரை ஆள்வான்
திருவரங் கங்கோயிற் சிறப்பு.

(நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி)

பெருவரங்கள் கருதுமன்பர் பெறவழங்கு வகுளநங்
குருவரங்கொள் கவியிலன்பு கொடுவ வண்முனரனய
னிருவரங்களமுத மண்டியொழுகு பொன்னிவலமலருந்
திருவரங்க நகருறங்கு திருவரங்க னெய்தினன்.

(ஸ்ரீசடகோப திவ்ய சரித்திரம்)